விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 24
ஒலி 097 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 12 ஞாயிற்றுக்கிழமை (26.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## இனப்பிரச்சினையை தீர்க்க செயற்குழு நியமனம்

### வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி



(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக இலங்கையில் முன்மொழியப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் வழிமுறைகளை வகுக்க தென்னாபிரிக்காவுடன் இணைந்து இலங்கை செயற்குழு ஒன்றை அமைக்கும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித் துள்ளார்.

அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ வுடன் இணைந்து 19

## தேர்தல் ஒத்திவைப்பு நீதிமன்றில் முறையிடுவோம்

### பஃவ்ரல் அமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் ஒத்திவைப்பு, தேர்தலுக்கான நிதி விடுவிக்காமை தொடர்பில் நீதிமன்றத்தில் முறையிடவுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பஃவ்ரல் அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணம் விடுவிக்கப்படாமை தொடர்பில், நிதி அமைச்சருக்கு எதிராக நீதிமன்றத்தில் விடயங் 19



# பொறுப்புக்கூறலில் தொடர்ந்து தாமதம்

### இலங்கை தொடர்பில் ஐ.நா கடும் அதிருப்தி

(ஜெனிவா)

போர்க்குற்ற விவகாரத்தில் இலங்கை பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் தொடர்ந்து தாமதப்படுத்துவது தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் மீளாய்வுக்குழு தனது கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் இயங்கும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் தொடர்பான மனித உரிமைகள் மீளாய்வுக்குழுவின் இலங்கை தொடர்பான 6 ஆவது மீளாய்வுக்கூட்டம் கடந்த 7ஆம் 8 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இம்மீளாய்வின்போது இலங்கை தொடர்பில் கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் எதிர்வரும்காலங்களில் இலங்கையால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய பரிந்துரைகள் என்பவற்றை உள்ளடக்கிய 12 பக்க 19

## மடுவில் துப்பாக்கிச்சூடு இளைஞன் உயிரிழப்பு



(மன்னார்)

மன்னார் மடுப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் 32 வயதுடைய ஏகாம்பரம் சுகிர்தன் (சின்னா) என்ற இளைஞன் உயிரிழந்துள்ளார்.

மன்னார்மடு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தட் 19

## உள்ளூராட்சி மன்றங்களின் நடவடிக்கைகள் ஆராய

### ஜனாதிபதியால் குழு நியமனம்

(கொழும்பு)

அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் தலைமையிலான குறித்த குழுவில், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கம்புர, நிதி இராஜாங்க அமைச்சர், மாகாண ஆளுநர் 19

## இலங்கையில் டெங்கு அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக சுகாதார நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள் ளது.

மேல் மாகாணத் 19

## நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து யாழ்.மாநகர சபை வெளியேறுக

### ஆளுநர் பணிப்புக்கு எதிராக உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையினை நாவலர் மண்டபத்திலிருந்து வெளியேறுமாறு ஆளுநர் வழங்கிய பணிப்பு தொடர்பில் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்படும் என யாழ். மாநகர சபை முன்னாள் உறுப்பினர் வரதராஜன் பார்த்திபன் தெரிவித்துள்ளார்.

குறித்த உத்தரவினை மீளப் பெறுமாறு கோரியும் எதிர்வரும் மார்ச் 27ம் திகதி திங்கட்கிழமை ஆளுநருக்கு மக 19

## ஊடகத்துறை தலைவராக

### பூங்குழலி நியமனம்



19

## நிமோனியாக் காய்ச்சலால் 7 மாதக் குழந்தை மரணம்

### பண்ணாகத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 7 மாத ஆண் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

யாழ்ப்பாணம் பண்ணாகம் பகுதியில் நேற்று மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே 19

## தேர்தலுக்கு அஞ்சும் ஆட்சியாளர்கள் எவ்வாறு நாட்டை கட்டியெழுப்புவார்கள்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி

(கொழும்பு)

தேர்தலுக்கு அஞ்சும் ஆட்சியாளர்கள் எவ்வாறு நாட்டை கட்டியெழுப்புவார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி எழுப்பியுள்ளார்.

பொரளை குப்பியவத்தை யில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரி 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

சிவமயம்



## பொதுக்கூட்டமும் திருப்பணி வேலைகள் சம்பந்தமான கலந்துரையாடலும்

## கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் A9 வீதி கிளிநொச்சி

எமது ஆலய பொதுக்கூட்டமும் ஆலயத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் திருப்பணி வேலைகள் சம்பந்தமான கலந்துரையாடலும் எதிர்வரும் 11.04.2023ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு ஆலயமண்டபத்தில் நடைபெற இறையருள் கைகூடியுள்ளது. சகல பொதுச்சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு எல்லாம் வல்ல முருகப் பெருமான் திருவருளோடு கேட்டுக் கொள்கின்றோம்.

**நிகழ்ச்சி நிரல்**

(1) தேவாரம்
(2) ஆலய பிரதம குரு உரை
(3) ஏனைய சமயப் பெரியார் உரை
(4) தலைமை உரை
(5) செயலாளரின் சென்ற வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்
(6) வருடாந்த கணக்கறிக்கை சமர்ப்பித்தல்
(7) கணக்காய்வாளரின் கருத்துரை
(8) ஏனைய விடயங்கள்
1. ஆலயத்தில் நடைபெறும் திருப்பணி வேலைகள் சம்பந்தமான கலந்துரையாடல்
(9) கிராம அலுவலரின் உரை
(10) கலாசார உத்தியோகத்தர் உரை
(11) நன்றியுரை - செயலாளர்
(12) தேவாரம்

குறிப்பு - அனைவரது நேரத்தையும் கருத்தில் கொண்டு குறித்த நேரத்திற்கு சமூகமளிக்குமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

நன்றி

ஆலய பரிபாலன சபை சார்பில்

ச.ஸ்ரீகௌரிபாலா — தலைவர்
மா. சிவராசா — செயலாளர்
சு.வரதராசா — பொருளாளர்

(C-6236)



## பதினெட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1952 . 03 . 05



மறைவு 2005 . 03 . 26

## அமரர் கதிர்காமு சந்திரலிங்கம்

வாழும் காலத்தில் எமக்கு
வாழ்வையும் உழைப்பையும்
கற்றுத் தந்த எம் தெய்வமே
எம் காலம் உள்ளவரை
உம்மையும் உம் நினைவுகளையும்
மறந்திடோம் ஐயா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

(15040)

மயூரன்ஸ் ஜீவல்லர்ஸ்
இல. 95, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

எஸ்.எஸ். மொபைல்ஸ்
எஸ்.எஸ். போக்குவரத்துசேவை
(சந்திரலிங்கம் சறோஜினிதேவி)
இல. 65, சத்திரச்சந்தி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்


## தேர்தலுக்கு...

விக்கையில்,ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான யானை, காகம் மொட்டு ராஜபக்ஷ அரசாங்கம் தேர்தலை நடத்தாதிருப்பதற்கு பாரிய சதித்திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும்,.

தேர்தலுக்கு ஒதுக்கப்படும் பணத்தை வழங்காமல், நீதிபதிகளை விமர்சனம் செய்தும்,அவர்களை குறைமதிப்புச் செய்தும் மிரட்ட முயற்சிக்கின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் பட்டினியால் வீதியில் இறங்கும் போது அரச மிருகத்தனத்தையும் பயங்கர்வாத்தையும் பிரயோகிப்பதை இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது என்றார். (ம-9)


## விசா சம்பந்தமான ஆலோசனைகள்

ஐரோப்பிய நாடுகளுக்கான Student visa, work visa/ Visit visa/ Permanent Resident visa தேவைப் படுபவர்கள் எங்களிடம் தொடர்பு கொள்ளவும்.

Hybrid International Hub (pvt) Ltd

076 250 0098/ 021 222 1265

(C-6233)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ 43 வயது விவாகரத்து பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு
077 905 8615
(வைபர் & வாட்ஸ்ஆப்)

(15048)

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் ஐஸ் கிறீம் உற்பத்தி நிலையத்திற்கு பொதியிடல் வேலைக்கு பெண் வேலையாட்கள் தேவை.

077 777 0916

(15045)

# VILLAGE HOTEL

## யாழ் - கொழும்பு சேவை மீண்டும் ஆரம்பம்

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பேரூந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதனை அறியத் தருகின்றோம்.

- VILLAGE HOTEL நிர்வாகம் -



077 544 8503

(14967)

## நாகபூஷணி திருமண சேவை

### மணமகன் தேவை

01. 1994,செவ்-இல்லை 30 பாவம் Doctor க்கும்
02. 1994, செவ்-இல்லை 35 பாவம் Doctor க்கும்
03. 1996,சூரி/செவ் 19 பாவம் Software Engineer க்கும்
04. 1992,செவ்-07 பாவம்-30 Civil Engineer க்கும்
05. 1994,செவ்-இல்லை பாவம் -25 Software Project Asst க்கும்
06. 1996,செவ்.இல்லை பாவம் 23 Software Engineer க்கும்
07. 1994,செவ்.இல்லை Bsc Teacher க்கும்
08. 1994,செவ்-இல்லை 20 பாவம் (ICT) Teacher க்கும்
09. 1997, செவ்-01, 30 பாவம் (ICT) Teacher க்கும்
10. 1996 சூரி/செவ் 05 பாவம் Bsc (Hons) Asst. Lecturer க்கும்

மணமகன்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

பல்லாயிரக்கணக்கான வரன்கள் எம்மிடம் உள்ளன.

மிகப்பொருத்தமான ஜாதகங்கள் எம்மால் தெரிவு செய்து உடன் தரப்படும்.

இல.264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

021 222 9306, 077 138 7596, 071 999 9306

(C-6237)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம் – பருத்தித்துறை

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை -2022

# மாணவர் கௌரவிப்பு நிகழ்வு 26.03.2023



ஜெறோம் ஜெயதாஸ் வரோணிஷா 169 புள்ளிகள் | ரமேஷ் தர்ஷன் 164 புள்ளிகள் | சிவகுமார் சானுஜா 162 புள்ளிகள் | குகலிங்கம் விகாஷன் 157 புள்ளிகள் | சுரேஷ் ஜெய்ருஸ் 156 புள்ளிகள் | வசீமராஜா அன்புச்செல்வம் 155 புள்ளிகள் | ராஜீவ் எஷானா 153 புள்ளிகள் | கிருபாகரன் நிஸ்விந் 152 புள்ளிகள்



மதியழகன் ஹம்சினி 152 புள்ளிகள் | கேசவன் அக்ஷயா 150புள்ளிகள் | சுரேஷ் அபிஷன் 146 புள்ளிகள் | இந்திரகுமார் துவேஸ்னா 146 புள்ளிகள் | றாகுலன் தக்ஷி 146 புள்ளிகள் | யோகேஸ்வரன் பிரித்தனா 146 புள்ளிகள் | பிரதீபன் அக்ஷயன் 146 புள்ளிகள் | விஜேந்திரா ஆஜிசன் 145 புள்ளிகள் | ஈஸ்வரன் அக்ஷயன் 144 புள்ளிகள்



தவசீலன் அபிஷன் 141 புள்ளிகள் | பிரசாத் ஸ்ரிஷானா 141 புள்ளிகள் | சுதர்சன் லோஜினி 139 புள்ளிகள் | ரமேஸ் பிரபிகா 138 புள்ளிகள் | விஜயலதன் தனுஸ்ரி 138 புள்ளிகள் | ஜசிகரன் அம்சிகா 138 புள்ளிகள் | சங்கர் சப்தகி 135 புள்ளிகள் | நவநீதன் திவிஷன் 135 புள்ளிகள் | குணாளன் அபிநயன் 133 புள்ளிகள்



இதயராசா லக்சிகன் 133 புள்ளிகள் | கனகேந்திரராசா அக்சயன் 130 புள்ளிகள் | சுரேஸ்குமார் டினோஜன் 130 புள்ளிகள் | ஜனார்த்தனன் டினோஷனா 129 புள்ளிகள் | கமலன் அக்ஷயன் 126 புள்ளிகள் | செந்தில்நாதன் ஜெனீபன் 125 புள்ளிகள் | ரதீஸ் கபிஷாலினி 122 புள்ளிகள் | பகீரதன் அபிஷன் 121 புள்ளிகள் | திருஞானவேல் கபிஷன் 121 புள்ளிகள்



பார்த்தீபன் தஹ்சிகா 121 புள்ளிகள் | கிருபேந்திரமூர்த்தி அக்ஷயா 118 புள்ளிகள் | செல்வசாந்தன் ஐஸ்விகா 114 புள்ளிகள் | சுரேசன் சைலுஷன் 111 புள்ளிகள் | வரதராசா அபிஷா 108 புள்ளிகள் | சதீஸ்வரன் அபிஸ்ஷன் 106 புள்ளிகள் | சிவஞானசுந்தரம் தனுஷிகா 105 புள்ளிகள் | கிருபானந்தன் கஷ்னி 103 புள்ளிகள்



அஜந்தன் அபிஷாந் 102 புள்ளிகள் | சிவப்பிரதீஸ் மதுமிதன் 92 புள்ளிகள் | சிவபாலா விஜய் 88 புள்ளிகள் | சிவநேசன் தர்ஷிகா 82 புள்ளிகள் | அன்பழகன் சாருயன் 81 புள்ளிகள் | ரஜீவன் அனுஸ்கா 78 புள்ளிகள் | ரசிதரன் தர்மிகன் 78 புள்ளிகள் | நிஷாந்தன் எஸ்தர் 74 புள்ளிகள் | ரஜனிகாந்த் றசிகா 72 புள்ளிகள்




வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற 17 மாணவர்களோடு 100 புள்ளிக்கு மேல் பெற்ற 44 மாணவர்களையும் 70க்கும் 100க்கும் இடையில் புள்ளிகளைப்பெற்ற 8 மாணவர்களையும் வழிநடாத்திய அதிபர் ம.ரகுதீபன் மற்றும் அவர்களுக்குப் போதித்த ஆசிரியப்பெருந்தகைகளையும் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்களை வழிநடத்திய பெற்றோர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

(15036)

**வாழ்த்துவோர்: பாடசாலை சமூகம் யா/மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜூன் மாதம் முதல்

# யாழில் கிரிக்கெட் அக்கடமி ஆரம்பிக்கப்பட்டு வீரர்களுக்கு பயிற்சி

ஜூன் மாதம் தொடக்கம் யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் அக்கடமி ஆரம்பிக்கப்பட்டு கிரிக்கெட் வீரர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக கிரிக்கெட் அக்கடமியின் இயக்குநர்களில் ஒருவரான வைத்தியர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், கிரிக்கெட்டை உயர்த்த உதவி செய்கிறோம். தரமான வீரர்களை உருவாக்கி, சர்வதேச தரத்தில் வீரர்களுக்கு வாய்ப்புக்களை வழங்கும் நோக்குடன், யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாக அக்கடமி உருவாக்கப்பட்டுள்ளது.

அதனூடாக வீரர்களுக்கு உயர்தரப் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அத்துடன் கொழும்புக்கு வீரர்களை அழைத்துச் சென்று, புற்தரைகளில் விளையாட வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுக்கவும் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம்.

தேசிய சர்வதேச வீரர்களுடன் விளையாடும் அவர்களின் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தி கொடுப்போம் என்றார். (4-33)


## வாத்தியங்கள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள வீணை, தம்புரா, ஹார்மோனியம், சுருதிப்பெட்டி விற்பனைக்குண்டு.

தொடர்பு (15049)

075 043 0845



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 1 ½ பரப்பு காணி விற்பனைக்கு.

- நல்ல சூழல் நன்னீர் ஊற்று நிலம்.
- ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம்
- A9 வீதியில் இருந்து 300 M தூரம்.
- லங்கா அசோக் லேடன் வாகன விற்பனை நிலைய பின்புறம் (15050)

பார்வையிடும் நேரம்:- காலை 8 - மாலை 6 வரை

தொடர்பு: 076 436 5814, 077 076 0389


# பூப்பந்தாட்ட சம்மேளனத்தின் மாகாண மட்டப் போட்டிகள்






வடக்கு மாகாண பூப்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மாகாண மட்டப் போட்டிகள் நேற்று முன்தினம் ஆரம்பமானது. குறித்த போட்டியின் ஆரம்ப நிகழ்வு காலை 9 மணியளவில் கிளிநொச்சி உள்ளக விளையாட்டரங்கில் ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வில், மாகாண பூப்பந்தாட்ட சம்மேளனத் தலைவர், 57 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி, மாவட்டச் செயலக விளையாட்டு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். குறித்த போட்டியில் 500இற்கு மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கு பற்றுவதுடன், இன்று வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-100-316)


## மரண அறிவித்தல்

மண்ணில் 11 . 09 . 1940



விண்ணில் 25 . 03 . 2023

### கார்த்திகேசு சிவஞானசுந்தரம் (சின்னமணி)

அல்வாய் வடக்கு, பாணம்பற்றையைப் பிறப்பிடமாகவும் "திருப்பதி" அல்வாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சிவஞான சுந்தரம் அவர்கள் நேற்று (25.03.2023) சனிக்கிழமையன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சின்னக்குஞ்சு தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - அன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவஞானவதி, மதிவாணன் (லண்டன்), சிவரஞ்சன் (லண்டன்), சிவாஸ்கரன், சுரேஸ்குமார், சிவதீபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பரஞ்சோதி மற்றும் மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மனோரஞ்சிதம், அருஞ்செல்வம், செல்வானந்தம் (சுவிஸ்), கமலாதேவி (இத்தாலி), புஸ்பராணி (கனடா), செல்வமலர், சச்சிதானந்தம் (சுவிஸ்), விஜயராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் அன்பழகன், சிவச்செல்வி (லண்டன்), கனீபர் (லண்டன்), ஜெயா, மனோதினி, நர்மதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அஜித் (சுவிஸ்), அபிலா, அனோதன், மதுஷாந்த், யதுஷன், கிர்த்திகன், சஜீனா, மதுஷா, விசாலி, விசாகன், சுஜீனா, சுஜீன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"திருப்பதி"
அல்வாய் வடக்கு. (C-6238)

தகவல்: குடும்பத்தினர்
076 567 3570



## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ 04 . 02 . 1960

கண் நெகிழ 26 . 03 . 2018



அமரர்

### கோபாலபிள்ளை நாகேஸ்வரன்

(முன்னாள் கண்டாவளை பிரதேச செயலர்)

ஆண்டுகள் ஐந்து கடந்து விட்டது
நம்ப முடியவில்லை ஐயா! நின் சிரித்த வதனம்.
நேற்றுத்தான் பார்த்தது போல் இருக்கிறது.
தனியே இருக்கிறேன் என்று அன்னையையும்
அழைத்துக் கொண்டாய்.
எம் துயர் சொல்ல வார்த்தை இல்லை
நின் ஆன்மா நல்லூர்க் கந்தன்
பாதக் கமலங்களில் இளைப்பாற
வேண்டுகின்றோம்.

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. (15043)


மனைவி, மகன்
மற்றும் உறவினர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உணவுப் பாதுகாப்பு இன்மையை எதிர்கொள்ளும் 6.3 மில். மக்கள்

**(கொழும்பு)**

**இலங்கையில் 6.3 மில்லியன் மக்கள் இன்னமும் ஓரளவு அல்லது மோசமான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர் கொள்கின்றனர் என செஞ்சிலுவை செம்பிறைச்சங்கங்களின் சர்வதேச சம்மேளனம் தெரிவித்துள்ளது.**



போதுமான வாழ்வாதார உதவிகள் வழங்கப்படாவிட்டால் தற்போதைய நிலை 2023 இல் மோசமடையும் எனவும் தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியின் தாக்கம் தொடர்ந்தும் உயர்வாகக் காணப்படுகின்றது. இந்த நெருக்கடி தற்போதைக்கு முடிவிற்கு வரப்போவதில்லை என்பதை பல ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

எனினும் இது நீடிக்கலாம். மக்களின் நிலைமை படிப்படியாக மோசமடையும் எனவும் செஞ்சிலுவை செம்பிறைச்சங்கங்களின் சர்வதேச சம்மேளனம் தெரிவித்துள்ளது. (4)

# பால் தேநீரின் விலை ஏப்ரல் முதல் குறையும்

## சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

பால் தேநீரின் விலை குறைப்பு தொடர்பில் அகில இலங்கை சிற்றுண்டிச் சாலை உரிமையாளர்கள் சங்கம் அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய ஏப்ரல் மாத தொடக்கத்தில் இருந்து பால் தேநீரின் விலை குறைக்கப்படும் என அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது 100 ரூபாவாக காணப்படும் ஒரு பால் தேநீரின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# யாழ்.புகையிரத நிலைய அதிபராக சுரேந்திரன் நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதம புகையிரத நிலையத்தின் புகையிரத நிலைய அதிபராக தேவராஜாசர்மா சுரேந்திரன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்தின் மூத்த புகையிரத நிலைய அதிபரான இவர் நாளை 27 ஆம் திகதி முதல் பதவியேற்கவுள்ளார்.

கொழும்பு, மருதானை, கொட்டகலை, சீனன் குடா, திருகோணமலை, மட்டக்களப்பு, செட்டிக்குளம், மாங்குளம், சுன்னாகம் முதலிய புகையிரத நிலையங்களில் இவர் கடமையாற்றி இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (4-33)

# சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தை கலைக்க அரசாங்கம் தயாரில்லை

## சாகல ரத்நாயக்க

(கொழும்பு)

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தைக் கலைப்பதற்கான எவ்வித ஏற்பாடுகளும் அரசாங்கத்திடம் இல்லையென தேசியப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டு அமைச்சரவை பத்திரத்திற்கமைய சிவில் பாதுகாப்பு சேவை, காலாவதியாகும் சேவையாக அங்கீகரிக்கப்பட்ட போதிலும் அதன் காலம் நிறைவடைந்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

அதன் பிரகாரம், சிவில் பாதுகாப்புத் திணைக்கள உறுப்பினர்களுக்கு 60 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்வதற்கு, 55 வருடங்களில் சேவைக்கால நீடிப்பைக் கோர முடியும் எனத் தெரிவித்த சாகல ரத்நாயக்க, அவ்விடயங்கள் எதுவும் மாறவில்லை எனக் குறிப்பிட்டதுடன், எதிர்காலத்திலும் மாற்றம் செய்யும் நோக்கம் இல்லையென்றும் அவர் வலியுறுத்தினார்.

மொரட்டுவை கட்டுபெத்தவில் அமைந்துள்ள சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் தலைமையகத்தில் அத் திணைக்கள அதிகாரிகளால் ஆற்றப்படும் சேவையை பாராட்டும் வகையில் நேற்று முன்தினம் பிற்பகல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாராட்டு நிகழ்வில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (4)

# பொன்.நடராசாவின் 93 ஆவது அகவை பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வேலணை சரஸ்வதி வித்தியாலய ஓய்வு நிலை அதிபர் பொன்.நடராசாவின் 93 ஆவது அகவை பாராட்டு விழா இன்று காலை 9 மணிக்கு இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது. (4)

# பயங்கரவாத சட்டத்திற்கு எதிராக தமிழ் மக்கள் போராட வேண்டும்

## யாழில் வசந்த முதலிகே

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிராக தமிழ் மக்கள் ஒன்றிணைந்து போராடுவதன் ஊடாக வடக்கில் காணிப்பிரச்சினை, இராணுவ மயமாக்கல் பிரச்சினை மற்றும் வடக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் மக்களின் ஏனைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக முதற்படியாக அமையுமென அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே யாழில் தெரிவித்துள்ளார்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை உடனடியாக நீக்க வேண்டும், மக்கள் சக்தியினை கட்டியெழுப்புதல் தொடர்பான பொதுக்கருத்தரங்கு நேற்று யாழில் இடம்பெற்ற போது வசந்த முதலிகே இவ்வாறு தெரிவித்திருந்தார்.

வடக்கின் பிரச்சினையினை அறியும் தெற்கு மனிதர்களும் தெற்கின் பிரச்சினையினை அறியும் வடக்கு மனிதர்களும் உருவாக்கப்பட வேண்டும். அதுவே அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் நிலைப்பாடு. அதற்கான முதற்கட்டமாகவே கருத் தரங்கு யாழில் இடம்பெற்றுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவேண்டும், அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதே ஆணித்தரமான எமது நிலைப்பாடு. தற்போது அரசாங்கம் புதிதாக சட்டம் ஒன்றினை உருவாக்கியுள்ளது. அதில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஒன்றினை கொண்டுள்ளது.

அதில் போராட்டங்களின் போது சமூக ஊடங்களின் மூலம் அரசுக்கு எதிராக செயற்பட முடியாது என்பதை கொண்டு வந்துள்ளனர் என மேலும் தெரிவித்தார். (4-33-104)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)
யா/போக்கட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் கால்கோள் விழா தென்மராட்சிக் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெறவுள்ள குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலயத்தின் ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் சோ.திருக்குமரனும் கௌரவ விருந்தினராக ஸண்டனைச் சேர்ந்த நலன் விரும்பி சி.அமரசிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (4-30)

# மரம் நடுகை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் அல்லை விலாஸ் நிறுவனத்தினர் வனவள திணைக்களத்தினருடன் இணைந்து முன்னெடுக்கும் மரம் நடுகை செயற்றிட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ். அல்லைப்பிட்டியில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் ஆ.சிவபாலசுந்தரன் கலந்து கொள்ளவுள்ளார். (4)


தென்னாடு

செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

உ
சிவசிவ

## தென்னாட்டில் தெய்வத்தமிழில் தீக்கை வழங்கல்

சைவத்தமிழ் அன்பர்களே!

நீங்கள் அனைவரும் சிவப்பேறு தந்திடும் தீக்கையினை தெய்வத்தமிழில் பெற்றிட அரிய வாய்ப்பினை தென்னாடு செந்தமிழாகம சிவமடம் நல்கியுள்ளது.

இடம் :- தென்னாடு செந்தமிழாகம சிவமடம், குளங்கரை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.

திகதி :- பங்குனித் திங்கள் 19 ம் நாள் (02.04.2023)

நேரம் :- காலை 7 மணியளவில் திருக்கோயில் வழிபாட்டுடன் ஆரம்பமாகும்.

தீக்கை வழங்குபவர்:- அருட்குருநாதர் ஒளியகம் ந. ஒளியரசு ஐயா (சென்னை தெய்வீகச் சித்தாந்த இலக்கிய மன்றத் தலைவர்)

அருளாசி :- சூரியனார்கோயில் ஆதீனம் ஸ்ரீகார்யம் வாமதேவ தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகள்

மறைமலை அடிகளார் வழிவந்த அருட்குருநாதர் ஒளியகம் ந.ஒளியரசு ஐயா அவர்களின் திருக்கரங்களாலே, சூரியனார்கோயில் ஆதீனம் ஸ்ரீகார்யம் வாமதேவ தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகளின் அருளாசிகளோடு முதலாம், இரண்டாம் தீக்கை என்றழைக்கப்படுகின்ற நுழைவு (சமய) தீக்கை, நோன்மை (விசேட) தீக்கை ஆகியனவற்றை பெற்று பேரருள் பெற்றிட தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

எவ்வித கட்டணங்களுமின்றி முற்றிலும் இலவசமாக தீக்கைகள் பெற்றுக் கொள்ளலாம். சைவப்பண்பாட்டு உடைகளுடன் வருகை தரவேண்டும். நோன்மை (விசேட) தீக்கை பெறுபவர்களிடத்தே தகைமைகள் எதிர்பார்க்கப்படும்.

திருச்சிற்றம்பலம்

தென்னாடு செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 70 770 1111

(சி-6234)



தென்னாடு

செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

உ
சிவசிவ

## தென்னாட்டில் செந்தமிழாகம அர்ச்சகர் சான்றிதழ் பயிற்சி நெறி ஆரம்பம்



தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே-
-திருமந்திரம்

யாழ்ப்பாணம் கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தினால், செந்தமிழ் ஆகம அர்ச்சகர் நெறிக்கான சான்றிதழ் பயிற்சி நெறி வருகின்ற பங்குனித் திங்கள் 20ஆம் நாள் (03.04.2023) அன்று தென்னாடு சிவமடத்தில் வதிவிடக்கற்கை நெறியாக ஆரம்பமாக உள்ளது. இப்பயிற்சிநெறியினை **மறைமலை அடிகளார் வழிவந்த அருட்குருநாதர் ஒளியகம் ந. ஒளியரசு ஐயா** அவர்கள் தொடக்கி வைக்கின்றார்கள்.

பயிற்சி நெறியை சிறப்பாக நிறைவு செய்கின்றவர்களில், தெரிவு செய்யப்படும் செந்தமிழ் அர்ச்சகர்களிற்கு, சுவிஸ்ரலாந்து, லண்டன், டென்மார்க், அயர்லாந்து போன்ற நாடுகளில் உள்ள தமிழ் ஆகமக் கோயில்களில் பூசை மற்றும் தமிழ் வாழ்வியல் சடங்குகளை முன்னெடுப்பதற்கான வாய்ப்புகளும் உங்கள் பிரதேசங்களில் உள்ள தமிழ் ஆகமக் கோயில் பூசை மற்றும் தமிழ் வாழ்வியல் சடங்குகளை முன்னெடுப்பதற்கான வாய்ப்புகளும் கைகூடும்.

ஆகவே செந்தமிழ் ஆகம அர்ச்சகர் நெறிக்கான சான்றிதழ் பயிற்சி நெறியில் இணைந்து கற்க விரும்புபவர்கள் தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தை தொடர்பு கொள்ளவும். இப்பயிற்சி நெறியானது கட்டணமின்றிய முற்றிலும் இலவசமான சான்றிதழ் பயிற்சி நெறியாகும். (காலம் 3 மாதம் - வதிவிட பயிற்சி, 4 இருக்கைகள் மட்டுமே உள்ளன. ஆகவே தெரிவு மூலம் தான் அனுமதி வழங்கப்படும்.)

திருச்சிற்றம்பலம்

தென்னாடு செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 70 770 1111

(சி-6235)


# இராசிபலன்

26.03.2023
பங்குனி 12, ஞாயிற்றுக்கிழமை
பஞ்சமி முன்னிரவு 8.13 மணிவரை
கார்த்திகை பிற்பகல்- 5.21 மணிவரை

சுபநேரம் -9.15-10.45மணிவரை
இராகுகாலம்-4.45-6.15 மணிவரை
தவக்கால ஞாயிறு

சந்திராஷ்டமம் -
சித்திரை, சுவாதி

வளவன்

**மேஷம்** உங்களின் வார்த்தைகளை பலரும் கேட்டு நடப்பர், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கடகம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**துலாம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**மகரம்** குடும்பத்தினரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான நன்மை கிடைக்கலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**ரிஷபம்** மனதில் இனம்புரியாத கற்பனைகள் தோன்றும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**விருச்சிகம்** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், காரிய அனுகூலமுண்டு, பால்ய நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**கும்பம்** சுப காரியங்களில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் நண்பர்கள் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்** ஆதாயமில்லாத அலைச்சல்கள் இடம்பெறலாம், தேவையற்ற மனச்சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, பொறுமையால் பெருமைகாண வேண்டிய நாள், சுப விரயங்கள் கூடும்.

**கன்னி** ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறும் வாய்ப்புண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ரோகபய முண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை கா[illegible] வேண்டிய நாள்.

**தனுசு** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், செய் தொழில் வளர்ச்சி கருதி புதிய முயற்சிகள் எடுப்பீர்கள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மீனம்** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கடமைகளில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவும் தெரியாதவனுக்கு எந்தச் சந்தேகமும் இருக்காது.

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 390

Viber 076 636 3378





> தற்போது மூழ்கியிருக்கின்ற பொருளாதாரக் கப்பலை மீட்டெடுப்பதற்கு சர்வதேச நாணயத்தின் உதவி குறித்த அங்கீகாரம் மிக முக்கியத்துவமாக இருக்கின்றது. இது ஜனாதிபதி ரணில் தலைமையிலான நிர்வாகம் மேற்கொண்ட முயற்சியின் பலனாகவே சாத்தியமாகி இருக்கின்றது.

# மீளுமா இலங்கையின் பொருளாதாரம்?

மூழ்கியிருக்கின்ற பொருளாதாரக் கப்பலை மீட்டெடுப்பதற்கு சர்வதேச நாணயத்தின் உதவி குறித்த அங்கீகாரம் மிக முக்கியத்துவமாக இருக்கின்றது.

பல்வேறு முயற்சிகள், பேச்சுவார்த்தைகள், சர்ச்சை நிலைகள், சவால்கள், ராஜதந்திர நகர்வுகள், கடந்த வருட கசப்பான அனுபவங்கள், வரிசை யுகம், பற்றாக்குறை, வாழ்க்கைச் செலவு உயர்வு, உணவுத் தட்டுப்பாடு, கல்வி, சுகாதாரத் துறைகளில் நெருக்கடி என சவால்களுக்கு மத்தியில் சர்வதேச நாணயம் இலங்கைக்கு 3 பில்லியன் டொலர் கடன் உதவியை வழங்குவதற்கான திட்டத்துக்கு அனுமதி வழங்கிருக்கின்றது.

இலங்கைக்கு இந்த நீண்டகால நீடிக்கப்பட்ட கடன் உதவியை வழங்குவதற்கான திட்டத்தை சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிறிஸ்டினா ஜோர்ஜியாவோ நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவுக்கு சமர்ப்பித்திருந்த நிலையில் அந்தத் திட்டத்திற்கு சர்வதேச நாணயத்தின் அனுமதி வழங்கியுள்ளது.

### முக்கிய அடைவுமட்டம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு இது மிகப்பெரிய ஒரு வெற்றியாகவே அமைந்திருக்கிறது. முக்கியமாக அரசாங்கத்துக்கு என்று கூறுவதை விட இது நாட்டின் பொருளாதார மீட்சிக்கு கிடைத்த ஒரு வெற்றியாகக் காணப்படுகிறது.

சர்வதேச நாணயத்தின் இந்த கடன் உதவி என்பது ஒரு பிணை வழங்கும் செயற்பாடாகவே கருதப்படுகிறது. எனவே சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதி மிக முக்கியமான ஒரு திருப்பு முனையாகும்.

இலங்கையின் பொருளாதாரம் நீரில் மூழ்கியிருக்கின்ற நிலையில் அதனை மீட்டெடுப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக இந்த உதவி கருதப்படுகிறது. பொருளாதார ரீதியாக மூச்சு விட முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்ற மக்களுக்கு மூச்சு விடுவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதி வழங்கி இருக்கின்றது.

### பேச்சுவார்த்தைகள்

உண்மையில் ஜனாதிபதி கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி பதவி ஏற்றதன் பின்னர் சர்வதேச நாணயத்தின் அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தைகள் தீவிரப்படுத்தப்பட்டன.

ஆரம்பத்தில் கடந்த வருடம் ஏப்ரல் மாதமே முன்னால் நிதி அமைச்சர் அலிசப்ரி தலைமையிலான குழுவினர் அமெரிக்காவுக்கு விஜயம் செய்து சர்வதேச நாணயத்துடன் பேச்சு நடத்தியிருந்தனர். அதன்பின்னர் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுக் கொண்டிருந்தன. கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி சர்வதேச நாணய நிதியத்தின் உத்தியோகத்தர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டது. அதாவது இலங்கைக்கு 2.9 பில்லியன் கடனுதவியை வழங்குவதற்கான உத்தியோகத்தர் மட்டத்திலான இணக்கப்பாடு எட்டப்பட்டது. அதனை சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழு அங்கீகரிப்பதாயின் இலங்கை தனக்கு கடன் வழங்கிய சகல தரப்புகளுடனும் கடன் மறுசீரமைப்பை செய்து கொள்ள வேண்டிய தேவை காணப்பட்டது.

### சவாலான கடன் மறுசீரமைப்பு

அதுவே இலங்கைக்கு மிகப்பெரிய ஒரு சவாலாகவும் காணப்பட்டது. முக்கியமாக இலங்கைக்கு கடன் வழங்கிய சீனா, இந்தியா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகள் மற்றும் உலக வங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இலங்கை கடன் மறுசீரமைப்பை செய்து கொள்ள வேண்டி இருந்தது. அதாவது கடன் மறுசீரமைப்பு என்பது இலங்கை கடன்களை ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின்னர் எவ்வாறு மீள வழங்கும் என்பது தொடர்பான ஒரு உத்தரவாதத்தை ஏற்படுத்திக் கொள்வதாகும்.

கடன் மறுசீரமைப்பு செய்து கடன் வழங்கிய நாடுகள் இலங்கைக்கான ஒரு நிதியியல் உத்தரவாதத்தை வழங்கினால் மட்டுமே நாணய நிதியத்தின் உதவி கிடைக்கும். கடந்த சில மாதங்களாக இந்த கடன் மறுசீரமைப்பை செய்து கொள்வதற்கு கடுமையான நடவடிக்கைகளை இலங்கை மேற்கொண்டது.

முக்கியமாக இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இந்தியா முதலாவது நாடாக இலங்கைக்கு நிதியியல் உத்தரவாதத்தை வழங்கியதுடன் சர்வதேச நாணயத்துக்கு கடிதத்தை அனுப்பியது. அதேபோன்று ஜப்பானும் இலங்கைக்கு முழுமையான உத்தரவாதத்தை வழங்கியது. ஜப்பான் தலைமையிலான பரிஸ் கிளப் நாடுகளும் இலங்கைக்கு நிதியியல் உத்தரவாதத்தை வழங்கின.

### இனி என்ன நடக்கும்?

அந்தவகையில் சர்வதேச நாண நிதியத்தின் கடன் உதவித் திட்டம் கிடைத்ததும் சர்வதேச நாடுகள் இலங்கைக்கு கடன்களை வழங்கும். 7 பில்லியன் டொலர்களை கையிருப்பில் சேர்க்க முடியும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. இந்த திட்டத்தின் ஊடாக டொலர் உள்வரும் பட்சத்தில் டொலரின் ரூபாவுக்கு நிகரான பெறுமதி குறைவடையும். ரூபாவின் பெறுமதி வளர்ச்சியடையும். அதேபோன்று இறக்குமதி பொருட்களுக்கான கட்டுப்பாடுகள் நீக்கப்படலாம்.

எரிபொருள் இறக்குமதி தேவையான அளவு மேற்கொள்ளப்படலாம். அதன் ஊடாக கியூ.ஆர். கோட்டா முறை நீக்கப்படும் சாத்தியம் இருக்கின்றது.

வங்கி வட்டி விகிதங்கள் குறைவடையலாம். ஏற்கனவே ரூபாவின் பெறுமதியை உயர்த்துவதற்கும் பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்குமே வட்டி விகிதங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. வரலாற்றில் என்றும் இல்லாதவாறு தற்போது வட்டி விகிதங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. சர்வதேச நாணயத்தின் திட்ட உதவி திட்டத்துடன் வட்டி வீதங்கள் குறைவடையும் சாத்தியம் இருக்கின்றது. வட்டி விகிதங்கள் குறைவடையும் பட்சத்தில் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் தமது வர்த்தக செயற்பாடுகளை முன்கொண்டு செல்ல முடியும். எனவே இந்த செயற்பாடுகளுக்கான கதவுகள் திறக்கப்படும் நிலைமை காணப்படுகிறது. இது பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு மிக முக்கியமாகும். குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்கள் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் செயற்பாட்டை மேற்கொள்கின்றன. கடந்த காலங்களில் வட்டி விகிதங்கள் அதிகரித்ததால் அந்தச் செயற்பாடுகள் ஸ்தம்பித்தன.

### மூழ்கிய கப்பலை மீட்பதற்கு...

தற்போது மூழ்கியிருக்கின்ற பொருளாதாரக் கப்பலை மீட்டெடுப்பதற்கு சர்வதேச நாணயத்தின் உதவி குறித்த அங்கீகாரம் மிக முக்கியத்துவமாக இருக்கின்றது. இது ஜனாதிபதி ரணில் தலைமையிலான நிர்வாகம் மேற்கொண்ட முயற்சியின் பலனாகவே சாத்தியமாகி இருக்கின்றது.

மக்களுக்கு மூச்சுவிடுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. அதாவது இது மறுக்கவே முடியாத ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இராஜதந்திர அடைவுமட்டமாகும். மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவின் வகிபாகமும் இங்கு மிக முக்கியமானது. எதிர்க்கட்சிஎம்.பி ஹர்ஷ டி. சில்வா இந்த அடைவு மட்டம் குறித்து ஜனாதிபதியை பாராட்டியிருக்கின்றார், இதனூடாக இதன் முக்கியத்துவத்தை உணர முடியும்.

### சவால்கள்

ஆனால் இங்கு சவால்களும் இலங்கைக்கு இல்லாமல் இல்லை. நாணய நிதியத்தின் இந்த உதவியுடன் இலங்கை உடனடியாக மேலே வந்து விடும் என்று கூற முடியாது. அதனுடன் இலங்கை தனது சொந்த முயற்சியின் ஊடாக டொலர் வருகையை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்தல், சுற்றுலாத்துறை வருமானத்தை உயர்த்துதல், வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் அனுப்புகின்ற அந்நியச் செலாவணியை அதிகரித்தல், வெளிநாட்டு நேரடி முதலீடுகளை பெற்றுக் கொள்ளுதல், சர்வதேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை செய்து வர்த்தகப் பரப்பை அதிகரித்தல் உள்ளிட்ட பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு இலங்கை டொலர் உள்வருகையை அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

இந்த இரண்டு விடயங்களும் சமாந்தரமாக பயணிக்கும் பட்சத்தில் மட்டுமே இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பானதும் முறையானதுமான புலம்பெயர்வின்



சிறு வயது முதல் இருந்ததொரு ஆசையின் காரணமாக எப்படியோ வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக ஒரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தில் இணைந்துகொண்ட நீங்கள் உங்களுக்கான வாய்ப்பு வரும்வரை பரபரப்புடன் காத்துக் கொண்டிருக்கிறீர்களா? இல்லையெனில் உங்களுக்கு தெரிந்த அல்லது உங்களுடைய நெருங்கிய உறவினர் ஒருவர் அவ்வாறு காத்துக்கொண்டு இருக்கின்றாரா? அப்படியானால் இக்கட்டுரை உங்களுக்கானது அல்லது அவ்வாறு காத்திருப்பவருக்கானது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

தேச எல்லைகள் ஊடாக இடம்பெறும் புலம்பெயர்வானது தொழிலுக்காக, கல்விக்காக, சுற்றுலாவுக்காக, சுகாதார வசதிகளுக்காக, நிரந்தரமாக குடியேறுவதற்காக அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காக இடம் பெறக்கூடும்.

இந்தக் கட்டுரையுடன் தொடர்புடையதாக மார்ச் மாதம் 19 ஆம் திகதியும் 20 ஆம் திகதியும் பிரசுரமாகிய கட்டுரைகள் ஊடாக தொழிலுக்காக வெளிநாட்டுக்கு செல்வதற்கு **முன்னர்** கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளன. இக்கட்டுரைத் தொடர் ஊடாக எதிர்பார்க்கப்படும் விடயம் யாதெனில் வேலைவாய்ப்புக்காக புலம்பெயர்பவர்களுக்கு தேவையான முக்கியமான தகவல்களை வழங்குவதாகும். மேலும், இங்கு குறிப்பிடப்படும் சில விடயங்கள் அனைத்து புலம்பெயர்பவர்களுக்கும் பொதுவானதாக இருப்பதால் நீங்களும் இந்த கட்டுரைத் தொடரை வாசித்து முறையான புலம்பெயர்வு பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

விளக்கம் அளிப்பதற்கு வசதியாக நாம் புலம்பெயர்வினை மூன்று பகுதிகளாக பிரித்துக் கொள்வோம்.

1. புலம்பெயர்வதற்கு முன்னர்
2. புலம்பெயர்வின் போது
3. புலம்பெயர்வு நிறைவடைந்த பின்னர்

இக்கட்டுரையின் மூலம் புலம்பெயர் வின் போதும், புலம்பெயர்வு நிறைவடைந்த பின்னரும் ஒரு புலம்பெயர் ஊழியர் என்ற வகையில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டிய சில விடயங்கள் கலந்துரையாடப்படுகின்றன.

## புலம்பெயர்வின் போது

வேலைவாய்ப்புக்காக வெளிநாட்டுக்கு செல்லும்போது குறிப்பாக கவனம் செலுத்த வேண்டிய இரண்டு ஆவணங்கள் உள்ளதுடன் அவை பின்வருமாறு.

1. **வீசா**
2. **தொழில் ஒப்பந்தம்**

### வீசா

வீசா அனுமதிப் பத்திரம் என்பது ஏதேனும் ஒரு நாட்டினால் அந்நாட்டின் பிரசை அல்லாத வெளிநாட்டு குடிபெயர்வாளருக்கு நாட்டிற்குள் நுழைவதற்கு அனுமதி வழங்கும் பொருட்டு வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் ஆகும். இந்த அனுமதிப்பத்திரம் நாட்டிற்குள் நுழையும் நோக்கத்திற்கு அமைவாக வேறுபடுவதுடன், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக புறப்பட்டுச் செல்லும் நீங்களும் கட்டாயமாக இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் செல்லுபடியாகும் தொழில் வீசா அனுமதிப் பத்திரம் ஒன்றை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

இந்தத் தொழில் வீசா அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளும்போது அனைத்து சந்தர்ப்பங்களிலும் சரியானதும் உண்மையானதுமான தகவல்களை சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் உண்மைக்கு மாறான அல்லது பிழையான தகவல்கள் அல்லது ஆவணங்களை சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் வீசா அனுமதிப் பத்திரம் சட்டத்தின் முன் உங்களை தவறு செய்தவராக மாற்றிவிடும். மேலும், தனது தொழிலுக்கு பொருத்தமான வீசா வகையை மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

செல்லுபடியாகும் வீசா அனுமதிப் பத்திரத்துக்கு மேலதிகமாக சில நாடுகளில் தொழில் புரிவதற்கு அனுமதி பெற்றுக் கொள்ளும் பொருட்டு தொழில் அனுமதி பத்திரமும் தேவையாக இருக்கலாம். இந்த தொழில் அனுமதிப்பத்திரம் சம்பந்தப்பட்ட நபர் கொண்டுள்ள வீசா அனுமதிப் பத்திரத்தின் வகையின் (வதிவிட வீசா, தொழில் வீசா போன்றவை) அடிப்படையில் அமைந்திருப்பதுடன் ஒவ்வொரு நாட்டிற்கும் அமைவாக இது வேறுபடக் கூடும்.

நீங்கள் குறிப்பாக ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான விடயம் யாதெனில் எந்த வகையான **விசா அனுமதிப் பத்திரத்தின் ஊடாக நீங்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு அல்லது வேலை வாய்ப்பினை தேடும் எதிர்பார்ப்பில் ஏதேனும் வெளிநாட்டிற்கு பயணம் செய்வதற்கு எதிர்பார்த்து இருந்தாலும் அதனுடன் தொடர்புடைய ஆவணங்களுடன் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் இருந்து மேலதிக தகவல்களை வினவி அறிந்து கொள்வதற்கு நீங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.**

அதன்மூலம் பல்வேறு மோசடிக்காரர்களினால் போலி ஆவணங்களை பயன்படுத்தி உங்களை இரகசியமாக வெளிநாட்டிற்கு அனுப்புவதன் மூலம் பெருந்தொகையான பணத்தை ஈட்டிக் கொள்வதற்கு முயற்சித்தல் மற்றும் அவ்வாறான முறைகளில் வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு இடையீடு செய்து நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் வெளிநாட்டிற்கு சென்ற பின்னர் வாக்குறுதி அளித்த தொழிலை உங்களுக்கு வழங்காமை, பல்வேறு ஆட்களின் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகுதல் மற்றும் உங்களுக்கு தெரியாத வேறு நாடுகளுக்கு மீண்டும் உங்களை பணத்திற்கு விற்பனை செய்யும் மனித விற்பனையில் இருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுதல் போன்றவற்றிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு நீங்கள் புரிதலுடன் பணியாற்ற வேண்டிய சரியான முறை தொடர்பாக பணியகத்தின் வழிகாட்டல்களை உங்களுக்கு அடைந்துகொள்ள முடியும்.

### தொழில் ஒப்பந்தம்

வீசா அனுமதிப் பத்திரத்துக்கு மேலதிகமாக நீங்கள் புறப்படுவதற்கு முன்னர் கையொப்பமிடும் தொழில் ஒப்பந்தத்தையும் நன்றாக வாசித்து அறிந்து கொள்ளுதல் வேண்டும். இதற்கான காரணம் என்னவெனில், இந்த ஒப்பந்தத்தில் கையொப்பம் இடுவதன் ஊடாக உங்களுக்கும் உங்கள் தொழில் தருனருக்கும் இடையில் உங்கள் சம்பளம், நீங்கள் ஒரு நாளில் வேலை செய்யவேண்டிய கால அளவு, மற்றும் சம்பந்தப்பட்ட தொழில் தருனருடன் கடமையாற்ற வேண்டிய வருடங்களின் எண்ணிக்கை, உங்களை தொழிலுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் காலம், ஒரு ஊழியர் என்ற வகையில் உங்களுக்குள்ள உரிமைகள் மற்றும் இந்த ஒப்பந்தம் வலுவிழக்கும் சந்தர்ப்பங்கள் போன்றவை தொடர்பாக நீங்கள் புரிந்துகொண்டுள்ளீர்கள் எனும் விடயம் இதன் மூலமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.



தொழிலுக்காக வெளிநாட்டுக்கு செல்லும் நீங்கள் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டிய ஒரு விடயம் யாதெனில் நீங்கள் ஒரு வெளிநாட்டிற்குள் நுழைகின்றீர்கள் என்பதையும் அங்குள்ள சட்ட திட்டங்கள் இலங்கையில் உள்ள சட்ட திட்டங்களை பார்க்கிலும் வித்தியாசமானது என்பதும் ஆகும்.

ஆகவே, நீங்கள் கையொப்பமிடும் அனைத்து ஒப்பந்தங்களையும் நன்றாக வாசித்து புரிந்து கொள்வதற்கு அனைத்து சந்தர்ப்பங்களிலும் முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும். பிற மொழியில் எழுதப்பட்ட ஏதேனும் ஒரு ஆவணம் இருக்குமாயின் ஆங்கில மொழிபெயர்ப்பை பெற்றுக்கொண்டு அந்த ஆவணத்தை நீங்கள் நன்றாக புரிந்து கொண்ட பின்னர் கையொப்பமிடுதல் வேண்டும்.

இதற்கு மேலதிகமாக, நீங்கள் வேலைவாய்ப்புக்காக செல்லும் நாட்டில் ஊழியர்கள் தொடர்பாக காணப்படும் சட்டங்களையும் இயலுமாயின் வாசித்தாவது அறிந்து கொள்வதற்கு புலம்பெயர் ஊழியர் என்ற ரீதியில் உங்கள் உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கு வாய்ப்பினை வழங்குகின்றது.

## புலம்பெயரும் போது

எப்போது புலம்பெயர வேண்டும் எனும் திகதியை பற்றி நீங்கள் உறுதியாக அறிந்து கொள்ளும் அதேவேளை பின்வரும் விடயங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்துதல் முக்கியமானதாகும்.

1. உங்களின் முக்கியமான ஆவணங்களின் (வெளிநாட்டு கடவுச்சீட்டு, வீசா அனுமதிப் பத்திரம், சான்றிதழ்கள், தொழில் ஒப்பந்தம், மருத்துவ அறிக்கைகள் போன்ற) பிரதிகளை உங்கள் குடும்ப அங்கத்தவர் ஒருவரிடம் அல்லது உங்களுக்கு நம்பிக்கையான ஒருவரிடம் கொடுத்து விட்டுச் செல்லுங்கள். உங்களுக்கு ஏதேனும் ஆபத்துக்கள் நேருமாயின் உங்களுக்கு உதவி வழங்குவதற்கு இந்தப் பிரதிகள் உதவக்கூடும்.

2. நீங்கள் பயன்படுத்தும் மருந்து வகைகளை குறைந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு போதுமான வகையில் எடுத்துச் செல்லுங்கள். உங்களுக்கு மருத்துவ வசதிகள் வழங்கப்படுவதாக உங்கள் தொழில் தருநர் வாக்குறுதி வழங்கினாலும் அத்தகைய வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது சம்பந்தப்பட்ட முறைமைகளில் உங்கள் விபரங்கள் இணைக்கப்படுவதற்கு தாமதம் ஏற்படக்கூடும். ஆகவே, குறிப்பிட்டதொரு காலப்பகுதிக்கு உங்களுக்கு தேவையான பொருட்களை எடுத்துச் செல்வது பொருத்தமானதாகும்.

3. உங்களை ஆட்சேர்ப்பு செய்த தொழில் தருநரின் விபரங்களை உங்களின் குடும்ப அங்கத்தவர் ஒருவரிடம் கொடுத்துவிட்டுச் செல்லுங்கள். மேலும், நீங்கள் புலம் பெயர்ந்த நாட்டிலுள்ள இலங்கை தூதரகத்தை தொடர்பு கொள்ளக்கூடிய முறையையும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுங்கள்.

4. நீங்கள் செல்லும் நாட்டில் ஆங்கில மொழிக்கு மேலதிகமாக வேறு ஏதேனும் மொழியை பயன்படுத்துவார்களாயின் அந்த மொழியில் அடிப்படையில் சில விடயங்களை தொடர்பாடக்கூடிய வகையில் சில வசனங்களை பயிற்சி எடுத்துக்கொண்டு செல்லுங்கள்.



## பணம் அனுப்புதல்

நீங்கள் புலம்பெயர்வதற்கு முக்கியமான காரணமாக இருந்த விடயம் வருமானத்தை ஈட்டிக் கொள்வதாகும். ஆகவே, அவ்வாறு ஈட்டப்பட்ட வருமானத்தை உரிய முறையில் பேணிவரும் பொறுப்பு உங்களுக்கு இருக்கின்றது. பிரச்சனைகளை இயன்றளவு குறைத்துக் கொள்ளும் பொருட்டு நிதி தொடர்பான ஒழுக்கத்தை பழகிக் கொள்ளுதல் வேண்டும்.

இலங்கைக்கு பணத்தை அனுப்பும் போது நீங்கள் உழைத்த முழு சம்பளத்தையும் அனுப்பி விடாமல் அதன் ஒரு பகுதியை சேமித்துக் கொள்வதற்கு ஏதேனும் ஒரு முறையை ஏற்பாடு செய்து கொள்ளுங்கள். நீங்களாகவே பணத்தை நேரடியாக அனுப்புவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளுங்கள். பணத்தை அனுப்பும் பொறுப்பை வேறொருவருக்கு வழங்குதல் புத்திசாலித்தனமான விடயமல்ல.

தங்களது வாடிக்கையாளர்களுக்கு வசதியான முறையில் வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய முறையில் வங்கிகளுக்கு நேரடியாக செல்லாமல் வசதிகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் பல்வேறு விதமான வசதிகள் வங்கிகளினால் தற்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் மிகவும் முக்கியமான வசதி இணையத்தளத்தின் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வாய்ப்புள்ளமையாகும்.

நீங்கள் புலம்பெயர்வதற்கு முன்னர் உங்கள் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு வங்கிக்குச் சென்று அத்தகைய வசதிகளைப் பற்றி சிறந்த புரிதலை பெற்றுக் கொள்ளுங்கள்.

## இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து கொள்ளுதல்

தொழிலுக்காக வெளிநாடு செல்லும் போது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து கொள்ளுதல் கட்டாயமானதாகும். இப்பதிவு புலம்பெயர்பவர் ஒரே தொழில்தருநரிடம் ஒப்பந்தம் செய்து கொண்ட காலத்தில் பணியாற்றினால் மாத்திரமே செல்லுபடியாகும். தொழில் தருநர் மாற்றம் அடைந்தால் மேற்படி பதிவினை புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்பதுடன் அதனை புலம்பெயர்பவர் தங்கி இருக்கும் நாட்டில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகத்தின் ஊடாக செய்து கொள்ள முடியும்.

- பதிவு செய்தல் - 17,928.00
- பதிவினை புதுப்பித்துக் கொள்ளுதல் - 3,774.00

இவ்வாறு அறவிடப்படுகின்ற பதிவு செய்தல் / புதுப்பித்தல் கட்டணம் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் செயற்படும் பல்வேறு நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்களினதும் அவர்களின் இந்நாட்டிலுள்ள குடும்ப அங்கத்தவர்களினதும் நலன்புரி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்றது (அதாவது, நிர்க்கதி நிலைக்கு உள்ளாகும் பெண் ஊழியர்களுக்கு பாதுகாப்பு இல்லங்களை நடாத்துதல், நிர்க்கதி நிலைக்கு உள்ளாகும் ஊழியர்களை இந்நாட்டிற்கு மீண்டும் அழைத்து வருதல், காப்புறுதி, பொருளாதார சிரமங்களை எதிர்நோக்கும் ஊழியர்களுக்கு சட்ட உதவிகளை வழங்குதல் போன்றவற்றுக்காக).



## புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு

புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (**International Organization for Migration**) என்பது ஐக்கிய நாடுகளின் புலம்பெயர்வுக்கான முதன்மையான சர்வதேச அமைப்பாகும்.

அதன் முக்கிய குறிக்கோள் யாதெனில் பாதுகாப்பானதும் முறையானதுமான புலம்பெயர்வினை ஊக்குவிப்பதாகவும். இதற்கு நாடளாவிய ரீதியில் பல்வேறு செயலமர்வுகளை நடாத்தி சமுதாயத்தை விழிப்புணர்வூட்டுவதற்கு அவ்வமைப்பின் உதவிக்கான பிரிவு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. மேற்படி செயலமர்வுகளில் புலம்பெயர்வினை பாதுகாப்பான முறையிலும் ஒழுங்கு முறையாகவும் எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதைப்பற்றி புலம்பெயர்பவர்களுக்கு சரியானதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான தகவல்கள் வழங்கப்படுகின்றன.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு அப் பிரிவினால் பேணி வரப்படும் 077-4410086 தொலைபேசி இலக்கத்தின் வாயிலாக தொடர்பு கொள்ள முடியும்.

பாதுகாப்பானதும் ஒழுங்கு முறையானதுமான புலம்பெயர்வின் மூலம் தனி [illegible] பெற்றுக் கொள்ள முடியும் எனும் கோட்பாட்டை புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு ஏற்றுக்கொள்கின்றது.

இன்றைய கட்டுரை கட்டாயமாக உங்களுக்கு பயனுடையதாக இருந்திருக்கும் என நம்புகின்றோம். கீழேயுள்ள பெட்டியில் கேட்கப்பட்டிருக்கும் வினாவுக்கான விடையை **SMS** முறையில் தரப்பட்டுள்ள தொலைபேசி எண்ணுக்கு அனுப்பி வைப்பதன் மூலம் சீட்டிழுப்பு முறையில் தெரிவு செய்யப்படுகின்ற வெற்றியாளர்களுக்கு தொலைபேசி முற்கட்டண (ரீலோட்) அட்டைகளை வெற்றி பெற முடியும். தெரிவு செய்யப்படுகின்ற வெற்றியாளர்களுக்கு தொலைபேசி மூலம் அது தொடர்பாக அறிவிக்கப்படும்.

வெளிநாட்டிற்கு செல்லுதல் தொடர்பாக அல்லது ஒழுங்கற்ற பயணத்தின் ஊடாக இன்னலுக்கு உள்ளாகியுள்ள நபர்கள் தொடர்பான நிவாரண நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருப்பின் 0774410086 தொலைபேசி இலக்கம் வாயிலாக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

இதன்போது பண்டிதர் பரமலிங்கத்தின் முகம் கறுத்திருந்தது. இதனை அவதானித்த கங்காணி கார்த்திகேயன் என்ன பண்டிதர் ஐயா! வழமையான முகச்செந்தழிப்பைக் காணல்ல. ஏதேனும் பிரச்சினையோ.

**பண்டிதர்:-** எங்கட மண்ணில எப்படி முகச் செழிப்போட இருக்க முடியும். திருவள்ளுவர் சிலைக்கு திருநீறு அணிவித்ததால், அது தொடர்பில பலத்த வாக்குவாதம் நடக்குது. ஆனையிறவில நடேசர் சிலை நிறுவினால் அதுக்கும் கடும் விமர்சனம். பிறகு என்னெண்டு தமிழினம் வாழுறது.

**விதானையார்:-** இந்தா, இப்பதான் பண்டிதர் ஐயாவுக்கு விளங்குது. இதைத்தான் நான் அடிக்கடி சொல்லுறனான். `சைவ சமயத்தை அழிப்பதற்கு சைவ சமயத்தவனே போதும். வேறு யாரும் வெளியில இருந்து வரத் தேவையில்லை எண்டு.

**சாத்திரியார்:-** தெரியாமல் தான் கேக்கிறன். நாவற்குழியில விகாரை அமைத்த போது அது பற்றி இவையள் விமர்சனம் செய்தவியளோ?

**விதானையார்:-** என்னெண்டு செய்வினம்.' இவையளப் பொறுத்த வரை எங்கட மண்ணில விகாரை வரலாம். திருக்கேதீச்சரத்து வளைவை உடைத்து விழுத்தி நந்திக் கொடியை சப்பாத்துக் காலால் உழக்கலாம்.

வரலாற்றுச் சிறப்புமிக்க சிவாலயங்களை உடைக்கலாம். அழிக்கலாம். கபளீகரம் செய்யலாம். ஆனால் அதுபற்றி எல்லாம் இவையள் கதைக்க மாட்டினம்.


ஆனால் வள்ளுவரின்ர சமய கலாசாரத்தைக் காட்டினால் அதுக்குக் கடும் கோபப்படுவினம்.

நடராஜர் சிலையை ஆனையிறவில நிறுவினால் ஆத்திரப்படுவினம். ஆனால் ஆனையிறவில படையினருக்கு நினைவிடம் அமைத்தால் அது பற்றி வாய் திறக்காயினம்.

**மூப்பர்:-** நடராஜர் சிலையை வைத்தால் தமிழினத்தின் ஒற்றுமை பாதிக்கும் எண்டல்லோ சொல்லுகினம்.

**பண்டிதர்:-** ஏனாம் சிவன் என்ன மேற்கத்தைய கடவுளோ.

இது சிவபூமி. சிவபக்தனாகிய இராவணேஸ்வரன் ஆண்ட மண். அந்த மண்ணில சைவம் தழைக்க வேணும். அப்பதான் தமிழ் வாழும்.



## ஆனையிறவில் நடராஜர் சிலை ஆர்ப்பரிப்பு எதற்கானது?

**சிறாப்பர்:-** பண்டிதர் ஐயா சொல்லுறது நூறு வீதம் உண்மை. தென்பகுதியில பார்க்குமிடமெல்லாம் புத்தர் சிலை. ஆறு, குளம், கடல், மலை எங்கும் புத்தர் சிலை வைக்கப்பட்டிருக்குது. ஆனால் இஞ்ச ஆனையிறவில-எங்கட தமிழ் மண்ணில நடராஜர் சிலை வைத்தால் அது பிழையா?

**விதானையார்:** என்னைப் பொறுத்த வரை இலங்கையில சைவசமயத்தை அழிக்கிறதுக்கு ஏற்பாடுகள் தாராளமாக நடக்குது.

ஏற்கனவே பௌத்த மதத்தை பின்பற்றிய ஒரு பகுதித் தமிழ் மக்கள் இல்லாமல் போயிற்றினம்.

தமிழ் பௌத்தர்கள் தங்கட தமிழ் மண்ணில அமைத்த பௌத்த கலாசாரங்களை இப்ப சிங்களப் பௌத்தர்கள் தங்கட வரலாற்றுச் சின்னம் எண்டு வெளிக்கிட்டிருக்கினம்.

இந்த நிலையில இலங்கையில இருந்து சைவ சமயத்தை அழித்து விட்டால், பிறகெங்க தமிழருக்கு இலங்கையில வரலாறு.

**வாத்தியார்:-** விதானையார் நீங்கள் சொல்லுறது நூறு வீதம் உண்மை. ஆனால் தமிழ்த் தேசியம் எண்ட பேரால சைவத் தமிழர்கள் ஏமாற்றப்பட்டிருக்கினம். அது தான் உண்மை.

**கங்காணி:-** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:-** உண்மையில பௌத்தத்திற்கும் இந்து சமயத்திற்கும் இடையில நெருங்கிய தொடர்பு உண்டு. பௌத்த விகாரைகளில இந்துக் கடவுள்களை வைத்துச் சிங்கள மக்கள் வழிபடுகினம்.

ஆனால் இந்து ஆலயங்களில புத்தரை வைத்து வழிபடுகின்ற நடைமுறை ஒருபோதும் இல்லை. அவ்வாறான ஓர் எதிர்பார்ப்பு பௌத்த சிங்களவர்களிடமும் இல்லை.

அதோட இந்துக் கோவில்களுக்குச் சென்று பய பக்தியாக வழிபடுகின்ற கலாசாரம் சிங்கள மக்களிடம் தாராளமாக இருக்குது. அப்படியிருந்தும் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒன்றுபட முடியவில்லை எண்டால், அதற்குள்ள இருக்கிற சூட்சுமம் என்ன? என்பதை நாங்கள் சிந்திக்கத்தானே வேணும்.

**மூப்பர்:-** அப்படியெண்டால் ஏன்? வாத்தியார் குருந்தூர் மலையில, கன்னியாவில பௌத்த விகாரைகளை அமைக்க சிங்களவர்கள் முயற்சிக்கினம்.

**வாத்தியார்:-** மூப்பர் கேக்கிறது நியாயம் தான். நாங்கள் தானே, இந்துக் கடவுளைப் பௌத்தர்கள் வழிபடுகினம் என்பது குறித்து இம்மியும் கவனிக்காமல் விட்டிட்டம்.

ஆனால் இன்றைக்கு நொண் ஆர் சி அமைப்புக்கள் தமிழ் மக்களை சைவத்தில இருந்து மதம் மாற்றுவதோட, அவ்வாறு மதம் மாற்றியவர்களைக் கொண்டு சைவ சமயத்திற்கு எதிராகப் பிரசாரம் செய்கினம்.

சைவக் கடவுளை சாத்தான்கள் எண்டு திட்டுகினம். சைவாலயங்கள் இருக்கிற இடங்களைத் தேடித்தேடி, நொண் ஆர் சிக்குரிய வழிபாட்டுச் சபைகளை அமைக்கினம். இது எந்த வகையில நியாயம்.

எண்டைக்கோ ஒருக்கா இந்த நாட்டை அந்நியர்கள் கைப்பற்றிச்சினம். அப்படிக் கைப்பற்றியவர்கள் தங்கட மதங்களைப் பரப்பிச்சினம் என்பதற்காக, அந்த அநியாயத்தை தொடர்ந்தும் தமிழர் பகுதியில செய்வதென்பது சரியோ?

(பண்டிதர் இவ்வாறு கூறியதும் அதற்குள் இருக்கக் கூடிய நியாயத்தை ஏற்றுக்கொண்டது போல மூப்பர் மௌனமாக இருக்க, ஆலடியும் அமைதியாயிற்று.

அமைதியைக் குலைக்க பண்டிதர் பரமலிங்கம் குரல் கொடுத்தார்.)

**பண்டிதர்:-** வாத்தியார் சொன்னது நூறு வீதம் உண்மை. அண்டைக்குத் தமிழ்த் தேசியம் எண்ட பேரில நாங்கள் பௌத்த மதத்திற்கு எதிராக நிண்டம். தமிழ் தான் எங்களை ஒற்றுமைப்படுத்தும் எண்டு நினைச்சம். மத பேதம் இருக்காது எண்டு நம்பினம். ஆனால் எண்டைக்கு மன்னாரில திருக்கேதீச்சரத்து நுழைவாயில் வளைவை கிறிஸ்தவர்கள் சிலரும் சில பாதிரிமாரும் தள்ளி விழுத்தி, நந்திக்கொடியை சப்பாத்துக் காலால் உழைக்கிச்சினமோ அண்டைக்குத்தான் சைவ மக்கள், தாங்கள் ஏமாற்றப்பட்டிட்டம் எண்ட உண்மையை உணர்ந்து கொண்டினம்.

ஆகையால், இனியும் தமிழ் மக்கள் மத மாற்றத்திற்கு ஆதரவளிக்கவோ, சமய பேதத்தை வளர்க்கவோ மாட்டினம் எண்டு நம்புவம். இவ்வாறு பண்டிதர் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/யாழ். இந்து

## தரம் - 5 புலமைப் பரிசில் ம



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கி.அர்மிதா 186 | சு.பவித்திரன் 185 | சி.திருவருண் 180 | ஜெ.ஹனுஸ்சிகன் 180 | ர.ஜதுகுலன் 177 | ஜெ.டனிஷ்கன் 175 | ச.நக்ஷத்ரா 174 | கு.சாரங்கன் 174 | வே.சிவக 173 |
| பி.நிரேஸ் 169 | ய.அக்சயன் 168 | ஜீ.புருசோத்மன் 168 | த.அஸ்மிதா 166 | க.ஜினோஷ் 166 | கோ.மோனிஷன் 166 | சி.லக்ஷகன் 165 | ச.தன்ஷிகா 165 | வே.யதுவ 165 |
| தி.தஸ்விகன் 163 | வி.ஜிதிஷ்பவன் 163 | ஜ.ஆருண்யன் 163 | பி.பவின் 163 | ஜெ.அஞ்ஞனா 162 | ஜெ.கர்னிகன் 162 | அ.லதூஸ் 162 | ச.சதுர்வினி 161 | செ.சங்க 160 |
| கோ.யஸ்வினி 159 | நி.அஸ்விதா 159 | ற.அனந்திகா 158 | ரூ.லினோஜ்ராஜ் 158 | வி.வர்னேஷ் 158 | வி.சதுர்வா 158 | கு.அபிந்தா 158 | த.டினிதிகா 157 | வி.ஷமி 157 |
| ஜெ.அட்சயா 154 | அ.டெஸ்மின் 154 | க.கஜீபவன் 154 | ச.தாரங்கி 153 | வி.ஸகிலேஷ் 153 | அ.துஜானா 153 | சு.சங்கவி 152 | கோ.வர்ஷனா 152 | ல.ரிஷா 152 |
| சு.சரண்யா 150 | இ.ஜெயவரினி 150 | க.சுருதிகா 150 | தி.கவின் 149 | வி.ஜாஸ்மின் 149 | க.ஹர்சன் 149 | மு.திவ்வியஸ்ரீ 149 | பி.கிறிஸ்விந் 149 | ப.துஷா 149 |
| இ.டில்ஷான் 147 | து.பவிஷனா 147 | சோ.லக்ஷனா 147 | க.இராஜாராம் 147 | ப.திருஷயன் 147 | பா.திசான் 147 | ச.ரிஷிராஜ் 146 | சி.ஆரணன் 146 | பா.அட்ச 146 |
| த.பிரவீன் 143 | சி.சமீனா 143 | | | | | | | |

Congratulations

தரம் 5 மாணவர்களின் பெற்றோர்களது பிரத்தியேக நிதிப்பங்களிப்புடன் வெளியிடப்படுகிறது.

(5037)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# …ப ஆரம்ப பாடசாலை

## …மாணவர்கள் கௌரவிப்பு - 2022



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| …சிவகாமி 173 | மு.விகாசினி 173 | ஷா.தேவந்திஹா 172 | ர.தரணிகா 172 | ஜெ.சுஜின் 172 | அ.கவிநயன் 172 | வி.கபிஸ்னா 171 | ச.அபிநயா 169 | ச.திவ்யாஷினி 169 |



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| …யதுவிகா 165 | சு.ஓவியா 165 | கோ.சாகித்தியன் 165 | செ.ஹர்ஷிகா 164 | இ.டில்சிக்கா 164 | யோ.தனுசன் 164 | த.லக்ஸ்மன் 164 | ந.பிரணவன் 164 | பி.தீபிகன் 164 |



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| …சங்கவி 160 | ச.சிவசூரியா 160 | தே.தரணிகா 160 | து.அக்ஷயன் 160 | த.அக்ஷனா 160 | க.மிதுன் 160 | கே.ரிஷிகேசன் 160 | ஜ.ஜாகவி 159 | க.பிரவின் 159 |



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| …ஷமிரா 157 | அ.கோவர்சா 157 | ப்.ஹரிஹரசுதன் 157 | ப.சயனிகா 157 | லி.அனுசன் 157 | டெ.அஸ்விநாத்வாஸ் 156 | சா.அஸ்வின் 155 | ச.மகீசன் 155 | சி.தாமிரா 154 |



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| …ரிஷாரா 152 | ர.கஜரூபன் 151 | கி.ஸ்ரீராம் 151 | ம.ஷானுசா 151 | லோ.கபிஷன் 151 | செ.தாரகி 150 | சி.திசாலினி 150 | பு.யுகராஜ் 150 | ச.பவித்திரன் 150 |



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| …துஷானிகா 149 | ம.ஸ்ரீநாத் 149 | சி.மகிசன் 148 | சி.லக்ஷன் 148 | சு.யாதவன் 148 | கி.டன்சிகா 148 | செ.ஆராதனா 147 | இ.சம்ரதன் 147 | ற.பிரணவன் 147 |



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| …அட்சயன் 146 | கி.தெய்வீகன் 146 | செ.ரிஷிகேசன் 145 | சு.ரிபிஷன் 145 | ந.பிரணவன் 145 | வ.கபிசன் 144 | நெ.மிலுஷன் 144 | நி.அகிஷான் 144 | ர.சஞ்சிகா 143 |

## வாழ்த்துவோர் : பாடசாலைச் சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



20 வருடங்கள் முன்பிருந்த தலை முறைக் கும் இப்போதிருக்கும் தலை முறைக்கும் இருக்கும் வித்தியாசம் என்ன மாமா?

**சங்கர சிவன் — வதிரி**

**கல்வியைப் பிள்ளைகளுக்கு கோவில் பிரசாதம் போல் வழங்க வேண்டும் ஹோட்டல் சாப்பாடு போல் வழங்கக் கூடாது என்ற திரைப்பட வசனம் பற்றி கூறுங்கள்?**

கோவில் பிரசாதம் என்பது கொஞ்சமாய் இருக்கும். ஆனாலும் அதை உண்டால் எமது மனதுக்கும் உடலுக்கும் திருப்தியை தரும்.

ஆனால் ஹோட்டல் சாப்பாடு நிறைய இருக் கும். அளவு கணக்கின்றி உண்டால் அதனால் உடலுக்குப் பல பிரச்சினைகள் ஏற்படும். இதைப் புரியாமல் கல்வியைக் காசுக்கு விற்கும் பலர் கல்விக்கூடம் என்ற பெயரில் ஹோட்டல் நடத்திக்கொண் டிருக்கிறார்கள் என்பதுதான் வேதனை.

**ரங்கா — யாழ்ப்பாணம்**

**சர்வதேச நாணய நிதியத்தின் நிதி கிடைத்தால் இலங்கை பொருளாதாரத்தில் இருந்து மீளுமா?**

ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் கடன். அதற்கு வட்டி மூன்று இலட்சம். மொத்த மாக அவர் செலுத்த வேண்டிய கடன் தொகை நான்கு இலட்சம். இந்தக் கடனை அடைப்பதற்கு அவர் என்ன செய்தார் தெரியுமா?

இன்னொருவரிடம் ஐந்து இலட்சத்தை வாங்கி நான்கு இலட்சம் கடன் போக ஒரு இலட்சம் மீதி தனது குடும்பப் பாரத்தை போக்கும் என நம்புகிறார்.

ஆனால் அவர் வாங்கிய ஐந்து இலட்சத் துக்கு மாதம் ஐந்து இலட்சம் வட்டி என்பதை மறந்து விட்டார் என்பது தான் கொடுமை.

**தரன் — வதிரி**

**ஒரு வேளை உணவுக்கு வழியின்றிய எம் சமூகத்தை மீட்க முடியாத வியாசரே?**

தற்சார்பு பொருளாதாரம் என்பது மிகவும் முக்கியமானது தமிழினம் முன்பு தற்சார்பு பொருளாதாரத்தில் நிலைத்து நின்றது. ஆனால் இன்று அதற்கு நேரெதிராய் மாறி யிருக்குது.

ஆம், ரெட் லேடி பப்பாசி பழத்துக்குள் விதை இருக்காது நட்டால் அதை பழம் கிடைக்குமே தவிர அதன் விதையினூடே மரம் வளராது.

உயிர் வேலியில் முருங்கை, அகத்தி, இப்பிலிப்பி, சண்டி என மூலிகை மரங்க ளும் வளவில் தென்னை, கமுகு, மா, பலா என மற்றவரிடம் கையேந்தாத அந்த நிலை கல் வீடு கட்டி, சுற்றுமதில் கட்டியது டன் முடிந்து போனது.




**அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**சுதன் — குப்பிழான்**

**சர்வதேசம் ரஷ்யாவுக்கு ஒரு நீதியையும் இலங்கைக்கு இன்னொரு நீதியையும் வழங்குவது ஏன்?**

இன்னமும் சர்வதேசம் எமக்கு நீதி தரும் என நம்பும் உம்மை நினைக்க சிரிப்புத்தான் வரு கிறது.

சர்வதேசம் நீதி வழங்காது போனால் ஒன்று க்கும் யோசிக்காதீர்கள் கடவுளின் தீர்ப்பொன்று உண்டு. அந்தத் தீர்ப்புக்கு முன் தவறு செய்த வர்கள் மண்டியிட்டுத்தான் ஆக வேண்டும். அப்போது நாம் அவர்களின் நிலையைப் பார்த்து நிம்மதியடையலாம்.

அதனால் இறைவனின் தீர்ப்புக்காக பொறு த்திருந்து பார்ப்போமாக.

**மதுவன் — மீசாலை**

**அண்ணன்-தங்கை உறவைப் பிரிப்பது யார் வியாசரே?**

தங்கை, தமையனினூடே ஒரு அண் ணியை எதிர்பார்ப்பாள். தமையன் தன் தங் கையினுடே தனக்கொரு மைத்துணனை எதிர்பார்ப்பான்.

இந்த இரண்டு எதிர்பார்ப்பும் நிறைவேறி விட்டால் போதும்.

அன்பு கொண்ட அந்த உறவில் விரிசல் எழத் தொடங்கிவிடும்.

இதைச் சொல்லும் போது பலருக்கு கோபம் வரும். ஆனாலும் அது தான் யதார்த்தம். உண்மை.



ஒரு வேளை உணவுக்கு வழியின்றிய எம் சமூகத்தை மீட்க முடியாத வியாசரே?

**நிஷாந் — கொல்லங்கலட்டி**

**நாட்டில் நடைபெறும் வன்முறைச் சம் பவங்களுக்கு காரணம் என்ன வியா சரே?**

நாட்டின் குடிமக்களை எவ்வளவு தான் ஆட்சியாளர்கள் வதைத்தாலும் பொறு மையாய் கடந்து செல்லும் மக்கள் தம் வயிற்றில் அடிக்கிறார்கள் என்பதை உண ர்ந்து கொண்டால் அதன் பின் அவர்களின் பொறுமை எல்லை கடந்துவிடும்.

இந்த நாட்டின் முதுகெலும்பான இளம் தலைமுறையை சீரழித்துச் சின்னாபின் னமாக்கும் செயற்றிட்டம் மிகத் தீவிரமாய் நடைபெறுகின்றன.

இதன் விளைவே இவை அனைத்தும்.

**திகான் — வடமராட்சி**

**20 வருடங்கள் முன்பிருந்த தலை முறைக்கும் இப்போதிருக்கும் தலை முறைக்கும் இருக்கும் வித்தியாசம் என்ன மாமா?**

தலைமுறையே வித்தியாசப்பட்டுவிட்டதே தம்பி. வெற்றிலையில் சுன்னாம்பு தடவிய எமக்கு ரச்போனை தடவ தெரிந்திருக்க வில்லை.

கரும்பலகையில் ஆசிரியர் எழுத எழுத பார்த்து எழுதி படித்த எமக்கு வெள்ளை போட்டில் மார்க்கரால் எழுதுவது தெரிந்தி ருக்கவில்லை.

இடைவேளைக்கு ஓடிவந்து மதிலுக்கு மேலால் தூள்போட்ட மாங்காய் வாங்கி ருசித்த எமக்கு வகுப்பறையிலேயே பான் பராக் போட்ட பழக்கம் இல்லை.

வாழ்வதற்கு வாழ்வைக் கற்ற எமக்கு சிறு வாக்கு வாதத்திற்கே வாள் வெட்டை ஒரு நாளும் கண்டதில்லை.

**அகிலன் — கனகராஜன் குளம்**

**உண்மையான அன்பை ஏற்றுக் கொள்ளாத பெண்கள் பற்றிக் கூற முடியுமா?**

உண்மை அன்பை ஏற்றுக் கொள்ளாதது பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் தான். வாழ்வில் சில நேரங்களில் கடவுள் எமக்கு மிகச் சிறந்த வாய்ப்பைத் தருவார்.

அந்த வாய்ப்பை நாம் சரியாய் பயன் படுத்தினால் வாழ்வு எமக்கு வசமாகும்.

இல்லையேல் அது எமக்கு விசமாகிவிடும். அன்பை செலுத்தும் போது ஏற்றுக் கொள்வதே சிறந்தது.

இல்லையேல் அதற்காக ஏங்கித் தவிக்க வேண்டி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடாக ஒரு சிறந்த எதிர்காலம்

ගොඩ යන්න, හරි පාරෙන් රට යන්න

சரியான வெளிநாட்டு வழி வெற்றிக்கான வழி

## மனுசவி பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்.

வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களின் பலமான வேண்டுகோள் எதுவாக இருந்ததெனில் ஓய்வுபெறும் வயதை அடையும் போது சலுகைகள் கிடைக்கும் வகையில் ஓய்வூதிய முறையொன்றை ஏற்பாடு செய்து, ஓய்வுக்கால வாழ்க்கையை ஆரோக்கியமாக கழிக்க ஏற்பாடு செய்து தர வேண்டும் என்பதாகும். மேற்படி பலமான வேண்டுகோளை நிறைவேற்றுவதற்கு தற்போது, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் சமூக பாதுகாப்பு சபை ஆகியவை மனுசவிய என்ற பெயரில் ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

## மனுசவி ஓய்வூதியத் திட்டத்தின் பயன்கள்

- 60 வயதிற்குப் பிறகு வாழ்நாள் முழுவதும் மாதாந்த ஓய்வூதியம்
- வாழ்கைத் துணைக்கு ஒய்வூதியம்
- ஓய்வூ பணிக்கொடை
- நிரந்தர பகுதியளவிலான இயலாமையின் கீழ் நலன்களுக்கான உரிமை
- நிரந்தர முழு இயலாமைக்கான ஓய்வூதியம்
- மரணப் பணிக்கொடை

மேற்படி முன்மொழியப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தில் உறுப்பினராவதற்கு மற்றும் விவரங்களை பெற்றுக்கொள்வதற்கு ஏதுவான இடங்கள்

- வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைமை அலுவலகம்
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மாவட்ட அலுவலகங்கள்
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விமான நிலைய கிளை
- இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் தலைமை அலுவலகம்
- இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் மாவட்ட அலுவலகம்

## HOPE GATE (ஹோப் கேட்) – நம்பிக்கை வாயில்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து கொண்டு வெளிநாடு செல்லும் ஊழியர்களுக்கு விமான நிலைய வளாகத்தில் தேவையான உதவிகளை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

மேலும், சில அசௌகரியங்கள் மற்றும் சுகயீனத்திற்கு மத்தியில் நாடு திரும்பும் தொழிலாளர்களுக்குத் தேவையான ஆவணங்களை ஏற்பாடு செய்துகொள்வதற்குத் தேவையான உதவிகள் உள்ளிட்ட ஏதேனும் நோய்கள் மத்தியில் நாடு திரும்புகின்ற சம்பந்தப்பட்ட ஊழியர்களை மருத்துவமனைகளில் சேர்த்தல் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் வழங்குதல் இந்த சேவையின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய வளாகத்தின் புறப்படும் முனையத்திலும், நாடு திரும்புவதற்கான முனையத்திலும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட சேவை வழங்கும் இடங்களாக இந்த நம்பிக்கை வாயில் தாபிக்கப்பட்டுள்ளது. இந்த நிவாரண பணிகளுக்கு விசேட பயிற்சிபெற்ற உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பணியகம் தெரிவிக்கின்றது.

மேலும், அநேகமான புலம்பெயர் ஊழியர்கள் தங்களின் பதிவை உரிய நேரத்தில் புதுப்பிக்காததால், அவர்களுக்கு கிடைக்கக்கூடிய பல நலன்புரி சேவைகளை இழக்க நேரிடுகின்றது. எனவே உங்கள் பதிவை காலாவதியாகும் முன் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

சொந்த நாட்டில் உள்ள குடும்ப உறுப்பினர் மூலமாகவும் பதிவை புதுப்பித்துக் கொள்ளலாம்.

## இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்துகொள்கின்ற புலம்பெயர் ஊழியர்களுக்கு நலன்புரி பிரிவினால் வழங்கப்படும் நன்மைகள்.

1. புலம்பெயர் ஊழியர்களுக்கு அவர்கள் பதிவு செய்து கொண்டமைக்காக பணியகத்தினால் வழங்கப்படும் காப்புறுதி
2. புலம்பெயர் ஊழியர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்கள் (**Scholarship Programme**)
3. முழுமையான இயலாமைக்கு உள்ளாகியுள்ள புலம்பெயர் ஊழியர்களுக்கு வீடுகளை வழங்குதல் (உதவி வீடமைப்புத் திட்டம்)
4. முழுமையான இயலாமைக்கு உள்ளாகியுள்ள புலம்பெயர் ஊழியர்களுக்கு சுயதொழில் உதவிகளை வழங்குதல்.
5. புலம்பெயர் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்குதல் (**School Equipment**)
6. புலம்பெயர் ஊழியர்களில் தங்கியிருப்பவர்களுக்கு விசேட நலன்புரி நடவடிக்கைகள்
7. புலம்பெயர் ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடனுக்கான பரிந்துரை கடிதங்களை வழங்குதல் (**loans**)

   அ. புலம்பெயர்வுக்கு முன்னரான கடன் (இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி) (**Pre departure loans**)

   ஆ. வீடமைப்பு கடன் ( இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி) (**housing loans**)
8. வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நோய் நிலையிலுள்ள புலம்பெயர் ஊழியர்களைப் பற்றி ஆராய்தல் மற்றும் மருத்துவ ஆலோசனைகளுக்கு அமைவாக தேவையான மருந்து வகைகள் மற்றும் போசாக்கான உணவு அத்துடன் விசேட தேவைகளுக்கான உதவிகளை வழங்குதல் (செயற்கை கால்கள் மற்றும் ஏனைய உதவிப் பொருட்கள்)
9. கொவிட்-19 பூகோலத்தொற்று காரணமாக மரணமடைந்த புலம்பெயர் ஊழியர்களின் குடும்பங்களுக்கு நிதி நிவாரணங்களை வழங்குதல்.
10. புலம்பெயர் ஊழியர்களுக்காக வழங்கப்படும் விசேட நலன்புரிச் சேவைகள் (**Special Welfare Assistance**)

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது - இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அல்லது சம்பந்தப்பட்ட நாட்டின் தூதரகங்கள் ஊடாக விவரங்கள்.



## முறையற்ற புலம்பெயர்வு என்றால் என்ன?



புலம்பெயர்வு செயன்முறையுடன் தொடர்புடைய ஒழுங்கு விதிகளை உரிய முறையில் பின்பற்றாமல் முறையற்ற வழிமுறைகளில் பிற நாடுகளுள் நுழைவதற்கு முயற்சி செய்தல் முறையற்ற புலம்பெயர்வாகும். இது போலியான ஆவணங்களை தயாரித்தல் முதல் ஆட்களை சட்டவிரோதமான முறையில் தேச எல்லைகளை கடக்கச் செய்தல் வரை விரிவடைந்துள்ளது.

இவ்வாறான முறையற்ற புலம்பெயர்பவர்கள் ஆட்கடத்தல், மனித விற்பனை அல்லது சென்றடையும் நாட்டின் சட்டங்கள் ஆகியவற்றில் சிக்கிக் கொள்வதால் தண்ட பணத்திற்கு அல்லது சிறைத்தண்டனைக்கு உட்படக்கூடும்.

உரிய தகைமைகள் இல்லாத அல்லது சரியான தகவல்களை அடைந்துகொள்ள இயலாத ஆட்களும் முறையற்ற விதத்தில் நாட்டின் எல்லைகளை கடந்த பிற முறையற்ற புலம்பெயர்ந்தவர்களும் தங்களது தற்போதைய சிறந்த பொருளாதார நிலைமையை உதாரணமாகக் காட்டிய சிலரினால் ஏமாற்றப்பட்ட ஆட்களும் வெளிநாட்டு தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்பில் அத்தகைய ஆட்கடத்தல்காரர்களுக்கு இரையாகக் கூடும். வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற்றுத்தருவதாக வாக்குறுதியளித்து மனித விற்பனையாளர்கள் ஆட்களை இலகுவாக தமது இரையாக மாற்றிக் கொள்வதற்கு மேற்படி போலியான முகவர்களுக்கு முடியுமாக இருப்பதற்கான காரணம் மக்களிடையில் விழிப்புணர்வு குறைவாக இருப்பதனால் ஆகும்.

ஆட்கடத்தல் மற்றும் மனித விற்பனை உலகில் பல்வேறு நாடுகளில் அவற்றின் சட்ட முறைமையின் ஊடாக தண்டனைக்குரிய ஒரு குற்றமாக இனங்காணப்பட்டுள்ளது. முறையற்ற புலம்பெயர்வு இலங்கையின் குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழும் தண்டனைக்குரிய ஒரு குற்றமாகும்.

## புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு



புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (**International Organization for Migration**) என்பது ஐக்கிய நாடுகளின் புலம்பெயர்வுக்கான முதன்மையான சர்வதேச அமைப்பாகும்.

அதன் முக்கிய குறிக்கோள் யாதெனில் பாதுகாப்பானதும் முறையானதுமான புலம்பெயர்வினை ஊக்குவிப்பதாகவும். இதற்கு நாடளாவிய ரீதியில் பல்வேறு செயலமர்வுகளை நடாத்தி சமுதாயத்தை விழிப்புணர்வூட்டுவதற்கு அவ்வமைப்பின் புலம்பெயர்வு உதவிக்கான பிரிவு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. மேற்படி செயலமர்வுகளில் புலம்பெயர்வினை பாதுகாப்பான முறையிலும் ஒழுங்கு முறையாகவும் எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதைப்பற்றி புலம்பெயர்பவர்களுக்கு சரியானதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான தகவல்கள் வழங்கப்படுகின்றன.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு அப்பிரிவின் 0774410086 தொலைபேசி இலக்கத்தின் வாயிலாக தொடர்பு கொள்ள முடியும்.

பாதுகாப்பானதும் ஒழுங்கு முறையானதுமான புலம்பெயர்வின் மூலம் தனி நபர்களுக்கும் ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனும் கோட்பாட்டை புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு ஏற்றுக்கொள்கின்றது.

**"சாதாரண சேவையின் கீழ் வெளிநாட்டு கடவுச்சீட்டுக்காக விண்ணப்பிக்கும் ஒருவர் தற்போது செலுத்த வேண்டிய கட்டணம் எவ்வளவு?"**

இவ் வினாவுக்கான விடையை பின்வரும் முறையில் புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் (**IOM**) நேரடி தொலைபேசி இலக்கம் 0774410086 இற்கு **SMS** (குறுஞ்செய்தி) வாயிலாக மார்ச் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைப்பதன் மூலம் தொலைபேசி முற்கட்டண அட்டைகளை (ரீலோட்) சீட்டிழுப்பு முறையில் வெற்றி பெறலாம்.

**SMS /** குறுஞ்செய்தி அனுப்பி வைக்கப்பட வேண்டிய முறை

செய்தி / பால் / வயது / மாவட்டம் / விடை .............................. 0774410086

உதாரணம்

News/ M/ 14/ Colombo/ Answer

News / ஆண் / 14 / கொழும்பு / சரியான விடை

SLBFE

IOM UN MIGRATION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

சுகமான விடியல் 335

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# அடிக்கடி உண்ணக்கூடிய உணவுவகைகள் எவை?

**நான் 73 வயதுடைய பெண். நான்கு வருடங்களுக்கு முன்பு நெஞ்சில் ஓரளவு வலி ஏற்பட்ட போது மருத்துவப் பரிசோதனை செய்து கொண்டேன். இதயத்தில் ஒரு பகுதி தடித்துள்ளதாகவும் ஒரு Silent Attack ஏற்பட்டுள்ளதாகவும் அத்துடன் குருதி அமுக்கம், கொலஸ்ரோல் உள்ளதாகவும் கூறி மருந்துகள் தந்தனர். அந்த மருந்துகள் வாழ்நாள் பூராகவும் பாவிக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. மருந்துகள் Atenolol 50mg. Atovastatin 10mg. Ecosprin 75mg.Clopidogrel 75mg. கடந்த நான்கு வருடங்களாகத் தினமும் இவற்றைப் பாவித்து வருகிறேன். இடைக்கிடை தனியார் வைத்தியசாலையில் பரிசோதித்த போது எல்லாம் Normal என்று கூறினார்கள். நான் உண்ணும் உணவில் உப்பு, கொழுப்பு குறைத்து காய்கறி, பழங்களை அதிகம் சாப்பிட்டு சுகமாக இருக்கிறேன். தொடர்ந்தும் இந்த மருந்துகளைப் பாவிக்க வேண்டுமா? அல்லது நிறுத்தலாமா?**

**பதில்:** உங்களுக்கு உயர்குருதியமுக்கம், இருதயத்திற்கான இரத்தக் குழாய்களில் கொலஸ்ரோல் படிவு மற்றும் இரத்தத்தில் அதிகரித்த கொலஸ்ரோல் ஆகிய நோய் நிலைகள் இருப்பதை உங்கள் கடிதத்தின் மூலம் அறிய முடிகின்றது. நீண்டகாலமாக மருத்துவத் துறை யில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகள், நீங்கள் தொடர்ந்தும் **Aspirin (Ecospirin), Atorvastatin** மற்றும் **Atenolol** ஆகிய மருந்துகளை உள்ளெடுப்பது உங்களுக்கு எதிர்காலத்தில் இந்நோய்களால் ஏற்படும் ஆபத்துக்களைக் குறைக்கும் என்பதை நிரூபித்து இருக்கின்றன.


இவை உங்களுக்கு மீண்டும் ஒரு மாரடைப்பு மற்றும் பாரிசவாதம் போன்ற இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படுவதால் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்க உதவும். இது உங்கள் ஆயுட்காலத்தை அதிகரிக்கும். நீங்கள் உள்ளெடுக்கும் **Clopidogrel** என்னும் மருந்தை வைத்தியருடன் கலந்தாலோசித்த பின் நிறுத்த முடியும்.

**உயர்குருதி அமுக்கத்திற்கான மாத்திரைகளை பாவிக்க ஆரம் பித்தால் எதிர்காலத்தில் அதனை நிறுத்திக் கொள்வதற்கான சாத் தியக்கூறுகள் இருக்கின்றனவா?**

**பதில் :** ஆம், நிறுத்திக் கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. உதாரணமாக அதிகரித்த உடல் நிறை உடையவர்கள் நிறை குறைப்பு செய்யும் பொழுது இது சாத்தியமாகின்றது. சில சிறுநீரக நோய் நிலைகள் கட்டுப்பாட்டிற்கு வரும் பொழுதும் இது சாத்தியமாகின்றது. பிரசவ காலத்தில் தற்காலிக உயர் குருதி அமுக்க நிலை ஏற்படுபவர்களுக்கு பிரசவத்தின் பின்னர் இதற்கான மருந்துகளை நிறுத்தக் கூடியதாக இருக்கிறது.

உயர்குருதி அமுக்க நிலை உள்ளவர்கள் தமது வாழ்க்கை முறைகளை மாற்றி ஒழுங்கான உடற்பயிற்சி, உணவு முறைகளில் மாற்றம்,மன அமைதி வழிமுறைகள் போன்றவற்றை கடைப் பிடித்து வருவார்களாக இருந்தால் அவர்களின் மருந்துகளின் அளவைக் குறைத்து சில சமயங்களில் நிறுத்திக் கொள்ளக் கூடிய நிலைகளும் ஏற்படலாம். சில ஓமோன் சம்பந்தமான பிரச்சினைகள் உள்ளவர்களுக்கு அவர்களின் அடிப்படை நோய் நிலை கட்டுப்பாட்டிற்கு வரும் பொழுது அதிகரித்த குருதி அமுக்க நிலையும் தானாக குறைந்துவிடும்.

இவர்களுக்கான மருந்துகளையும் நிறுத்திக் கொள்ள முடியும். உயர் குருதி அமுக்கம் உள்ளவர்கள் தன்னிச்சையாக தாமாக இதற்கான மருந்துகளை நிறுத்திக்கொள்வதோ மாற்றிக் கொள்வதோ ஆபத்தானது. மருத்துவக் குழுவின் ஆலோசனையுடனேயே இவை செயற்படுத்தப்பட வேண்டும். உயர்குருதி அமுக்கத்திற்கான மாத்திரைகளை பாவிக்க ஆரம்பித்தால் அதனை நிறுத்த முடியாது. எனவே அதனை பாவிக்காமலே இருந்து விடுவோம் என்று எண்ணிக்கொள்வது ஒரு தவறான ஆபத்தான சிந்தனை ஆகும். ஒருவரின் குருதி அமுக்கம் அதிகரித்துக் காணப்பட்டால் அதனை கட்டுப்படுத்துவதற்கு மாத்திரைகளின் பங்கு மிக முக்கியமானதாகும்.



**சீனிக்குப் பதிலாக பாவிக்கப்படும் இனிப்பூட்டிகள் பாதுகாப்பானவையா?**

**பதில்:** இவை மிகவும் இனிப்பான பதார்த்தங்களாக இருந்தபொழுதும், இவற்றுக்கு குருதிகுளுக்கோசின் அளவை அதிகரிக்கும் தன்மையோ அல்லது உடல் நிறையை அதிகரிக்கும் தன்மையோ இல்லை. அத் துடன் இவற்றுக்கு இரத்தத்திலே அல்லது உடலிலோ கொழுப்பின் அளவை அதிகரிக்கும் தன்மைகூட இல்லை. சீனி, சர்க்கரை போன்ற இனிப்பு வகைகளைப் பாவித்தால் பற்களில் பாதிப்புகள் ஏற்படலாம் என்பது அனைவருக்கும் தெரியும். அத்தகைய பாதிப்புகள் செயற்கை வகையான இந்த இனிப்பூட்டிகள் பாவிப்பதால் ஏற்படமாட்டாது.

இந்த இனிப்பூட்டிகளின் பாவனையால் ஏதாவது ஆபத்து நிகழுமா? அல்லது உடற்பாதிப்புகள் ஏற்படுமா? என்பது சம்பந்தமாக செய்யப்பட்ட ஆராய்ச்சிகள் அளவுடன் இவற்றை பாவிப்பது பாதுகாப்பானது என்பதை உறுதி செய்திருக்கின்றன. அளவுக்கு அதிகமாக எந்த உணவையும் உண்பது பாதுகாப்பான தல்ல என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.

பாயாசம், தேநீர், ஐஸ்கிறீம் வகைகள் மோதகம் போன்றவற் றுக்கும் இந்த இனிப்பூட்டிகளைப் பாவிக்க முடியும். நீரிழிவு நோய் உள்ளவர்கள் மட்டுமல்ல குடும் பத்தில் எந்த நோய் உள்ளவர்களும் அதிகரித்த நிறை உள்ளவர்களும் நிறை அதிகரிப்பை தடுக்க விரும்புவர்களும் சீனி, சர்க்கரைக்கு பதிலாக இந்த இனிப்பூட்டிகளைப் பாவிப்பது பாதுகாப்பானது.

**நிறை குறைப்பு முயற்சியில் ஈடுபடுபவர்கள் சுவைக்காகவும் பசியை போக்குவதற்காகவும் ஆரோக்கியத்திற்காகவும் அடிக்கடி உண்ணக்கூடிய உணவுவகைகள் எவை?**

**பதில்:** நிறை குறைப்பு முயற்சியில் ஈடுபடுபவர்கள் சுவைக்காகவும் பசியை போக்குவதற்காகவும் ஆரோக்கியத்திற்காகவும் அடிக்கடி உண்ணக் கூடிய உணவுவகைகளாகப் பின்வருவன வற்றைக் குறிப்பிடலாம். பழவகை குறிப்பாக கொய்யா, தோடை, அப்பிள், ஜம்பு, விளாம்பழம், பப்பாசி, வாழைப் பழம், நாவல் போன்றன. அத்துடன் எல்லாவிதமான மரக்கறி வகைகள் குறிப்பாக அகத்தி, முருங்கை, கோவா, கரட், பீற்றூட், தக்காளி, முள்ளங்கி, கீரைவகை, பயிற்றை, வெங்காயம், போஞ்சி, சிறகவரை, லீக்ஸ் போன்றவை. இத்துடன் பானங்களான மோர், இனிப்பூட்டிகள் சேர்த்த சீனி சேர்க்காத தேநீர், கோப்பி, பால், தேசிக்காய் தண்ணீர், குத்தரிசிக்கஞ்சி, தோடம்பழச்சாறு, இளநீர் போன்றவற்றை குறிப்பிடலாம். பால், முட்டை, மீன், இறால், தானிய வகைகள் போன்றவற்றை போதியளவு உணவில் சேர்த்துக் கொள்வது நன்மை பயக்கும்.

இவை எம்க்கு அதிகளவு புரதத்தை வழ ங்குவதுடன் பசியை கட்டுப்படுத்தவும் உணவில் சுவையை கூட்டுவதற்கும் உறுதுணையாக இருக்கும்.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு பகுதியில் உள்ள புத்தர் சிலை அகற்றப்பட வேண்டும்

## கச்சதீவு தல பரிபாலகர்

(யாழ்ப்பாணம்)

இரு நாடுகளின் அடையாளச் சின்னமாக விளங்கும் கச்சதீவு பகுதியிலுள்ள புத்தர் சிலைகள் அகற்றப்பட வேண்டும் என கச்சதீவு யாத்திரை தல பரிபாலகர் அருட்பணி வசந்தன் அடிகளார் கோரிக்கை விடுத்தார்.

கச்சதீவில் பௌத்த சின்னங்களில் புத்தர் சிலை வைக்கப் பட்டமை தொடர்பான புகைப்படங்கள் வெளியான நிலையில் நேற்று முன்தினம் கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

கச்சதீவு என்றாலே தமிழக மக்களுக்கும் இலங்கை தமிழ் மக்களுக்கும் ஏன் அண்மைய காலமாக சிங்கள மக்களுக்கும் ஞாபகத்துக்கு வருவது புனித அந்தோனியார் ஆலயமே.

ஆனால் திட்டமிட்ட வகையில் அண்மைய நாட்களில் இரண்டு புத்த பெருமானின் சிலைகள் வைக்கப்பட்டதுடன் அரச மரக்கன்றுகளும் நாட்டப்பட்டுள்ளன.

யாருக்கும் தெரியாத வகையில் உயரமாக பனை ஓலைகளால் வேலியமைத்து அது மூடப்பட்டு காணப்படுகின்றமையை சில நாட்களுக்கு முன்னர் பார்த்த புகைப்படங்கள் மூலம் அறியக் கிடைத்தது.

எதிர்காலத்தில் வரலாற்றை திரிவுபடுத்துவதற்கான முயற்சியே இது.

வடகிழக்கு தமிழர் பகுதியில் பௌத்த திணிப்பு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றது.

போருக்கு பின்னர் இன ஒற்றுமை பற்றி பேசப்படும் போது இவ்வாறான விடயங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

இரு நாடுகளின் அடையாளச் சின்னமாக விளங்கும் கச்சதீவுப் பகுதியிலுள்ள இவ்வாறான விடயங்கள் அகற்றப்பட வேண்டும்.

கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் புனிதத்திற்கும் தனித்துவத்திற்கும் பாதிக்காத வகையில் புத்தர் சிலைகள் அகற்றப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (4-33)




கடையிற் சுவாமிகள்

ஈழத்துச் சித்தர் மரபில் வந்த
சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளால்
1949 ஆம் ஆண்டு அளவெட்டியில் ஸ்தாபிக்கப்பட்ட



செல்லப்பா சுவாமிகள்

ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரம கோயில்



மஹா கும்பாபிஷேகம்

27.03.2023 திங்கட்கிழமை
காலை 9.40 மணிக்கு
ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரம கோயில்
கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி.

திருவருள் முன்னிற்க, வணக்கம்!

அமெரிக்க ஹாவாய் சைவ ஆதீன ஸ்தாபகர் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் தனது குரு சிவயோக சுவாமிகளின் ஆசியுடன் 1949 ஆம் ஆண்டு ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தை ஸ்தாபித்தார். ஆச்சிரமத்தில் 1972 ஆம் ஆண்டு சிறு கோயிலாக அமைக்கப்பட்ட பசுபதீஸ்வரர் ஆலயம் 50 வருடங்களின் பின் அக் கோயில் வளாகத்திலேயே புதிதாக அமைக்கப்பட்டு பங்குனி மாதம் 13ம் நாள் (மார்ச் 27) திங்கட்கிழமை காலை 9.40 மணிக்கு மஹா கும்பாபி ஷேகம் நடைபெற திருவருள் கைகூடி உள்ளது. இத் தெய்வீக நிகழ்வில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் நமசிவாய

***24.03.2023 (வெள்ளிக்கிழமை)***

காலை 6.30 மணி கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகி நடைபெற்றன.

***25.03.2023 சனிக்கிழமை***

எண்ணெய்க் காப்பு (அடியவர்கள் எண்ணெய் சாத்துதல் நிகழ்வு நடைபெற்றது)

***26.03.2023 (ஞாயிற்றுக்கிழமை)***

மாலை 6.30 மணிக்கு எண்ணெய்க் காப்பு சாத்துதல் நிறைவுறும்.

***27.03.2023 (திங்கட்கிழமை)***

7.30 மணிக்கு கிரியைகள் ஆரம்பம்
காலை 9.40-காலை 10.20 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில்
மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.
சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனைப் பாராயணத்துடன்
நிகழ்வுகள் நிறைவுறும்.



யோக சுவாமிகள்



சுப்பிரமுனிய சுவாமிகள்

(14958)




நல்லூர் வீரமாகாளி அம்மன் தேவஸ்தான முதன்மைப் பிரதம சிவச்சாரியார் ராஜ்யஸ்ரீ சிவ கமல்ராஜ் குருக்களிற்கு கௌரவக் கலாநிதி பட்டம் வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பில் இடம் பெற்றது.

# இலங்கையில் அதிகளவு விரயமாகும் மரக்கறி, பழங்கள்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் வருடாந்தம் முறையான போக்குவரத்து நடவடிக்கைகள் இன்மையினால், 19 சதவீத மரக்கறிகளும் 21 சதவீத பழங்களும் வீண் விரயம் செய்யப்படுவதாக தெரியவந்துள்ளது.

விவசாய அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது. அதன்படி, 2 இலட்சத்து 21 ஆயிரத்து 955 மெற்றிக் தொன் மரக்கறிகளும் 2 இலட்சத்து 90 ஆயிரத்து 151 மெற்றிக் தொன் பழங்களும் முறையான போக்குவரத்து இன்மையால் அழிவடைவதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அறுவடைக்குப் பின்னர் 40 சதவீதமான அறுவடை பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், நகர் பகுதிகளில் விரயமாகும் உணவின் அளவு அதிகமாக உள்ளதாகவும் விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது. கடந்த 2021 ஆம் ஆண்டில் விரயமாக்கப்பட்ட உணவின் அளவு 10 மில்லியன் மக்களுக்கு உணவளிக்க போதுமானது என விவசாய அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (4)

# இந்திய முட்டைகள் துறைமுகத்தில் தேக்கம்

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் துறைமுகத்தில் தேங்கி கிடக்கின்றதால் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்பட்டுள்ள முட்டைகள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கின்றன. அதனை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

முட்டைகளின் மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்பதால் அதற்கான நடவடிக்கைகயை சுகாதார அமைச்சு முன்னெடுத்துள்ளது.

எனினும், சட்டதிட்டங்களால் பண்டிகைக் காலத்தில் மக்கள் முட்டைகள் இன்றியே இருக்க வேண்டும். 2 மில்லியன் முட்டைகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

அந்தத் தொகுதி முழுவதும் துறைமுகத்தில் தேங்கி கிடக்கின்றதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டிற்கு கிடைக்க வேண்டிய 60 பில். டொலர் மாயம்

## தேசிய மக்கள் சக்தி

(கொழும்பு)

**“சர்வதேச நாணய நிதியம் எமது நாட்டுக்கும் மக்களுக்கும் பாதகமான நிபந்தனைகளை முன்வைக்குமாயின் அதை நாம் ஒருபோதும் ஏற்கப் போவதில்லை, நாங்கள் முன்வைக்கும் நிபந்தனைகளின் கீழ் கடனைத் தாருங்கள். இல்லையெனில் அந்தக் கடன் எமக்கு தேவை இல்லை” என தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.**

மேலும்அவர்தெரிவிக்கையில் “சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் மூலம் எமது சந்ததியின் எதிர்காலத்தை சீர்குலைக்க நாம் தயாராக இல்லை.

ஆட்சியாளர்கள் அவர்களது நெருங்கியவர்களின் துணையோடு வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ள டொலர்களே எமது நாட்டின் டொலர் தட்டுப்பாட்டிற்கு பிரதான காரணம்.

இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் 60 பில்லியன் டொலர் பணம் நாட்டிற்கு வரவில்லை என சர்வதேச தகவலின் மூலம் அறிய முடிகிறது.

அரசியல்வாதிகளின் ஆதரவோடு வெளிநாடுகளில் உள்ள கோடீஸ்வர வர்த்தகர்கள் அதை பதுக்கி வைத்துள்ளார்கள்.

சர்வதேச நாணய நிதியம் எமக்கு 2.6 பில்லியன் கடனைத் தான் தருகிறது. ஆனால் அந்த 60 பில்லியனில் 10 சதவீதத்தை கொண்டுவர முடிந்தாலே 6 பில்லியன் டொலர்கள் எமக்கு கிடைக்கும்.

இதன் ஒரு பகுதியினையாவது கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தாலே நாட்டின் டொலர் பிரச்சனைக்கு தீர்வினைப் பெறலாம் என அவர் தெரிவித்துள்ளார். (4)

# கட்டாரில் கட்டடம் இடிந்து வீழ்ந்து விபத்து

## இலங்கையர் ஒருவர் பலி

(டோகா)

மத்திய கிழக்கு நாடான கட்டாரில் கட்டடமொன்று இடிந்து வீழ்ந்ததில் இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை பின்டர்ஹமி அல் மன்சூரா பகுதியிலுள்ள தொடர்மாடி கட்டடம் ஒன்று இடிந்து வீழ்ந்து விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த அனர்த்தத்தில் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் காணாமல் போயுள்ளதாக பணியகம் தெரிவித்துள்ளது.

56 வயதான நிஷங்க சில்வா என்பவரே உயிரிழந்துள்ளதுடன், 60 வயதான அப்துல் ரசாக் ஜமீல் என்பவர் காணாமல் போயுள்ளார்.

குறித்த கட்டடத்தொகுதியில் பணியாற்றிய வேளையில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. (4)

# மசகு எண்ணெய் விலை நேற்று மேலும் வீழ்ச்சி




(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை, நேற்று மேலும் வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

நேற்று முன்தினம் 75.91 அமெரிக்க டொலராக பதிவான, ப்ரென்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை,நேற்று 74.99 டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது.

69.51 டொலராக நேற்று முன்தினம் பதிவான, டபிள்யூ.ரி. ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை,நேற்று 69.26 டொலராக பதிவாகியுள்ளது.

இயற்கை எரிவாயு பீப்பாய் ஒன்றின் விலை 2.2 அமெரிக்க டொலராக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன்னர் சம்பளம், ஓய்வூதியம், சமுர்த்தி கொடுப்பனவு!

## நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதிய கொடுப்பனவுகள் மற்றும் சமுர்த்தி கொடுப்பனவுகள் ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும் என அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

சிங்கள மற்றும் தமிழப் புத்தாண்டுக்கு முன்னர் இவை அனைத்தும் வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புத்தாண்டுக்கு முன்னர் அரச ஊழியர்களுக்கு இரண்டு தடவை சம்பளம் வழங்க வேண்டி இருப்பதால், அதற்குரிய நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாக பிரதமர் கூறியிருந்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு நிதியை விடுவிக்குமாறு எதிர்க்கட்சிகள் விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்திருந்தார். (4)

# வெளிநாட்டு வேலைக்காக செல்லவுள்ளோர் இணையத்தளமூடாக பதிவு செய்யலாம்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

(கொழும்பு)

தொழில் நிமித்தம் வெளிநாடு செல்லும் இலங்கையர்களுக்கு பணியகத்தின் இணையத்தள முறைமையின் ஊடாக பதிவு செய்வதற்கான வாய்ப்பு தற்போது வழங்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள் தொழில் நிமித்தம் வெளிநாடு செல்லும் இலங்கையர்களுக்கு பணியகத்தின் இணையத்தள முறைமையின் ஊடாக பதிவு செய்வதற்கான வாய்ப்பு தற்போது வழங்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

www.slbfe.lk என்ற இணையத்தளத்தில் சுய பதிவை (online self registration) அணுகுவதன் மூலம் இந்தப் பதிவை மேற்கொள்ள முடியும் என பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிகத் தகவல்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 1989 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4)



உலக நீர் தினத்தை முன்னிட்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வடபிராந்திய ஊழியர் தொழிற் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த 21 ஆம் திகதி இரத்ததான முகாம் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்தில் நடைபெற்றது.

# வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி இன்னும் வழங்கப்படவில்லை

## வாகன இறக்குமதியாளர்கள் சங்கம்

(கொழும்பு)

ஐ.எம்.எப் இன் கடன் வழங்கப்பட்ட போதிலும், வாகனங்களை இறக்குமதி செய்வதற்குத் தேவையான அனுமதி வழங்கப்படவில்லை என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் செயலாளர் பிரசாத் குலதுங்க தெரிவித்துள்ளார்.

மேலும், மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், இதுவரை வாகன இறக்குமதி செய்வதற்கான அனுமதி கிடைக்கவில்லையெனவும் குலதுங்க குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, வாகன இறக்குமதிக்கான தடை இவ்வருட வரவு-செலவுத் திட்டத்தில் தளர்த்தப்படும் என வாகன இறக்குமதியாளர்கள் எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

மூன்று வருடங்களாக வாகனங்கள் இறக்குமதி செய்யப்படாமையால் பாவனையாளர்களும் வாகன இறக்குமதியாளர்களும் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (4)

# 900 பயணிகளுடன் கொழும்பை வந்தடைந்த அதிசொகுசு கப்பல்



(கொழும்பு)

வைக்கிங் நெப்டியூன் என்ற அதிசொகுசு பயணிகள் கப்பல் நேற்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

900 சுற்றுலாப் பயணிகளுடன் இந்த சொகுசு கப்பல் இலங்கையின் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இக்கப்பலில் 400 ஊழியர்கள் சேவையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜதந்திரம் என்பது கையில் கல் கிடைக்கும் வரை நாயுடன் பேச்சுக் கொடுப்பது போன்றது.

~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புலம்பெயர் தமிழ்ச் சமூகம் இப்படியும் உதவி செய்யலாம்

நாட்டின் பொருளாதாரம் நலிவுற்ற நிலையில் பல்வேறு திட்டங்களை அரசாங்கம் வகுத்துள்ளது.

அதில் முக்கியமானது அரச உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்வதற்கு அல்லது உள்நாட்டில் தனியார் நிறுவனங்களில் பணியாற்றுவதற்கு வசதியாக, ஐந்து வருட லீவு வழங்குகின்ற வேலைத்திட்டமாகும்.

ஆம், இலங்கையின் பொருளாதாரம் பெரு வீழ்ச்சி காண்பதற்கு அரச சேவையில் அதிக மானவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையும் முக்கிய காரணமாக அமைகிறது என சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட அமைப்புகள் கருத்துரைத்துள்ளன.

இந்த நிலையில், அரச பணியில் இருக்கக்கூடியவர்களின் எண்ணிக்கையைச் சடுதியாக குறைக்க வேண்டிய தேவை உருவாகியது.

இதன் ஓர் ஏற்பாடாக அரச பணியாளர்களுக்கு ஐந்து வருட விடுமுறை வழங்கி அவர்கள் வெளிநாடுகளுக்கோ அல்லது உள்நாட்டில் தனியார் முயற்சிகளில் ஈடுபடுவதற்கோ அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை அரசாங்கம் அறிவித்ததும் வங்கிகள் மற்றும் அரச அமைப்புகளில் பணியாற்றும் சிங்கள உத்தியோகத்தர்கள் ஐந்து வருட லீவுக்கு விண்ணப்பித்து வெளிநாடுகளுக்குச் செல்லத் தயாராகியுள்ளனர்.

இதில் கணிசமானவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்றும் விட்டனர்.

வெளிநாடுகளில் ஐந்து வருடங்கள் உழைத்துவிட்டு நிறைந்த பணத்துடன் நாடு திரும்பும் அவர்கள் மீளவும் அரச சேவையில் இணைந்து கொள்வர்.

இத்திட்டமானது சிங்கள மக்களின் பொருளாதாரத்தில் காத்திரமான முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்பது நிறுதிட்டமான உண்மை.

இவ்வாறு சிங்கள உத்தியோகத்தர்கள் ஐந்து வருட விடுப்பில் வெளிநாடு செல்லுகின்ற அளவுக்கு நம் தமிழ்ப் பகுதியில் இருந்து வெளிநாடு செல்பவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு எனலாம்.

இதற்குக் காரணம் சிங்கள உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்வதற்கான ஆலோசனைகளும் வாய்ப்புகளும் அரச தரப்பால் செய்து கொடுக்கப்படுகிறது.

ஆனால் இச் சலுகைகள் நம் தமிழ் உத்தியோகத்தர்களுக்கு - படித்துவிட்டு வேலைக்காகக் காத்திருப்பவர்களுக்கு அறவே கிடைக்கவில்லை.

எனவே ஐந்து வருட விடுப்பில் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று அங்கு பணியாற்றிவிட்டு மீளவும் தாயகம் வருவதற்கான சந்தர்ப்பங்களை நம் புலம்பெயர் தமிழ் உறவுகள் தனிப்பட்ட நிலையிலும் அமைப்பு ரீதியாகவும் செய்ய வேண்டும்.

ஆம், இலங்கைக்கு வந்து முதலீடுகளை ஆரம்பித்து அதில் நம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டம் ஒருபுறமிருக்க, ஏழைக் குடும்பங்களில் இருக்கக்கூடிய இளைஞர்களுக்கு வெளிநாடு செல்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதனூடாக, அந்த இளைஞர்கள் தாமே உழைத்து தமது வீட்டை கவனிப்பதற்கும் தமக்கான முதலீட்டை ஈட்டுவதற்கும் உதவி செய்ய முடியும்.

ஆகையால், திட்டமிட்ட அடிப்படையில் நம் இளம் பிள்ளைகள், அரச உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்வதற்கான சந்தர்ப்பங்களை நம் புலம்பெயர் உறவுகள் செய்தாக வேண்டும். இது காலத்தின் கட்டாயம்.

# ஜனாதிபதி பதவியை இழந்து ரணில் தண்டனை அனுபவிப்பார்

## எதிர்க்கட்சி எம்.பி ஹர்ஷன தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீறிச் செயற்படுவதால் அவர் ஜனாதிபதிப் பதவியை இழந்ததும் தண்டனையை எதிர்கொள்ள வேண்டி வரும் இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜ கருணா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

தேர்தலுக்காக - அதன் மூலம் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக நாம் போராடி வருகின்றோம். உயர் நீதிமன்றம் சென்று சாதகமான தீர்ப்பு ஒன்றையும் பெற்றுள்ளோம். நீதிமன்றத் தீர்ப்பை மீறுகின்ற தண்டனையைஅனுபவிக்க வேண்டிவரும். ரணில் விக்கிரமசிங்கவும் தண்டனையை அனுபவிப்பார்.

அவர் ஜனாதிபதிப் பதவியில் இருக்கும் வரை தப்பித்துக் கொள்ளலாம். பதவியை இழந்ததும் அவர் நீதிமன்றம் செல்ல வேண்டிவரும். மைத்திரிபால சிறிசேனவுக்கு நடந்தது தெரியும் தானே. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் அவருக்கு எதிராக நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது. அப்படித்தான் ரணிலும் தண்டனையை அனுபவிப்பார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவு என்னவாக இருக்கும் என்று அரசுக்குத் தெரியும். அதனால்தான் தேர்தலை நடத்துவதற்கு அஞ்சுகின்றது அரசு.

தேர்தலை நடத்துவதற்கு நிதி இல்லை என்கிறார் ஜனாதிபதி ரணில். ஜனநாயகத்தை இப்படி மீற முடியாது. தேர்தலை நடத்தினால்தான் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வருவார்கள். ஜனநாயகம் உள்ளது என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்படும்.

பொருளாதார வளர்ச்சிக்குத் தேர்தல் மிகவும் அவசியம். மகிந்தவின் ஆட்சியில் ஜனநாயகம் மீறப்படுகின்றது என்று கூறி ஜி. எஸ். பி. பிளஸ் இல்லாமல் போனது. பொருளாதார வளர்ச்சி என்பது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில்தான் தங்கியுள்ளது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். ரணிலின் ஆட்சியிலும் அது மீண்டும் இல்லாமல் போவதற்கு வாய்ப்புண்டு என்றார். (ம-9)

# தேர்தலை பிற்போட்டமைக்கு எதிர்க் கட்சிக்கு தொடர்பில்லை

## நாலக கொட ஹேவா எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை காலவரையறையின்றி பிற்போடும் தீர்மானத்திற்கும், எதிர்க்கட்சிகளுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

தேர்தலை விரைவாக நடத்துமாறு சகல எதிர்க்கட்சிகளும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வலியுறுத்திய போது தேர்தலுக்கு முரணான கருத்துக்களை மாத்திரம் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன முன்வைத்தது என பாராளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

சகல அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடியதன் பின்னர் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பிற்போடப்பட்டது என ஆளும் தரப்பினர் குறிப்பிடுவது அடிப்படையற்றது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை காலவரையறையின்றி பிற்போட தேர்தல்கள் ஆணைக்குழு எடுத்த தீர்மானத்திற்கும், எதிர்க்கட்சிகளுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதியை விடுவிக்குமாறு உயர்நீதிமன்றம் பிறப்பித்த இடைக்காலத் தடையுத்தரவை மதிக்காமல் அரசாங்கம் குறிப்பாக நிதியமைச்சு செயற்படுகிறது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடவடிக்கைக்கு ஏற்பட்டுள்ள தடைகளுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் ஆணைக்குழுவின் அடிப்படையின் வழக்குத் தாக்கல் செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடம் வலியுறுத்தினோம் என்றார். (ம-9)

# துறைமுக சேவைகள் முடக்கப்பட மாட்டாது

## அரசாங்கத்திடம் உறுதி

(கொழும்பு)

துறைமுக அதிகார சபையின் கீழ் பணிபுரியும் இழுவைபடகு மற்றும் சிறிய கப்பல் செலுத்துநர்களின் சங்க அதிகாரிகள் துறைமுக சேவைகள் முடங்குவதற்கு இனியொரு போதும் இடமளிக்கப் போவதில்லையென அரசாங்கத்திடம் உறுதியளித்துள்ளனர்.

ஜனாதிபதி அலுவலக பிரதானி சாகல தலைமையில், கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவின் பங்கேற்புடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர்கள் இவ்வாறு உறுதியளித்துள்ளனர்.

கொழும்பு துறைமுகம் உள்ளிட்ட நாட்டின் ஏனைய துறைமுகங்களுக்கும் வருகைதரும் பெரும்பாலான கப்பல்கள் துறைமுகங்களின் முனையங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றமை மேற்கூறப்பட்ட சிறிய கப்பல்களினாலேயே முன்னெடுக்கப்படுகின்றன. மேலும், வெளித்துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கப்பல்களின் கப்டன்கள் மற்றும் பணியாளர்கள் சிறிய கப்பல்கள் மூலமே அழைத்து வரப்படுகின்றனர்.

கடந்த 15ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டத்தில் இந்த தொழிற்சங்கமும் கலந்து கொண்டமையால், அதன் பணிகள் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்டன. பின்னர் அவர்கள் மீண்டும் சேவைக்கு சமுகமளித்ததையடுத்து, சாகல ரத்நாயக்க தொழிற்சங்கத்தினரை அழைத்து கலந்துரையாடியிருந்தார். இதன்போது வேலை நிறுத்தத்தினால் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட அசௌகரியத்துக்கு அவர்கள் கவலை வெளியிட்டனர். அதனைத் தொடர்ந்து, தமது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினர். தற்போது நிதி பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வினை வழங்க முடியாது என இதன்போது சுட்டிக்காட்டிய சாகல ரத்நாயக்க, மீண்டும் இந்த சேவைகள் முடங்கினால் அரசாங்கம் மாற்று வழியை நாடும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# விவசாயத்திற்கு உதவி வழங்க நடவடிக்கை

இந்த வருடத்துக்கான சிறுபோகத்தின் போது சகல விவசாய நடவடிக்கைகளுக்கான உதவிகளை வழங்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, வவுச்சர் அல்லது விவசாயிகளின் வங்கி கணக்குகளுக்கு பணமாக குறித்த நிவாரணத்தை வழங்க எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

விவசாயிகளின் உற்பத்திச் செலவை குறைக்கும் நோக்கில்,இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Young Men's Christian Association- Jaffna

Carrom, Chess, Badminton, Table Tennis போன்ற விளையாட்டுக்கள் பழக்கக்கூடிய (Coach) ஒருவரை யாழ் YMCA எதிர்பார்க்கின்றது. 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் அலுவலக நேரத்தில் (8.00-4.30) தொடர்பு கொள்ளவும் (021-222 2499).

(C-6232) பொதுச்செயலாளர்.


## விண்ணப்பம் கோரல்

(வவுனியா)

வவுனியாப் பல்கலைக்கழகத்தினுடைய தொழில் வழிகாட்டல் அலகிலிருந்து முயற்சியாண்மையும் சிறு வியாபார முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது தரம் 9 பாடசாலைக் கல்வி அல்லது ஆரம்பக் கல்வியை பூர்த்தி செய்திருத்தலுடன் குறைந்த பட்சம் 2 வருட வேலை அனுபவத்தை கொண்டிருத்தல். குறைந்த பட்சம் 16 வயதினை கட்டாயம் பூர்த்தி செய்திருத்தல். கற்கை நெறிக்கான விண்ணப்பப் படிவம் மற்றும் ஏனைய தகவல்களை வவுனியா பல்கலைக்கழக இணையத்தில் (www.vau.ac.lk) பெற்றுக் கொள்ளமுடியும். மேலதிக தகவல்களுக்கு 077 468 3308 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். (4)


### வேலணை பிரதேச சபை பகிரங்க ஏல விற்பனை

வேலணை பிரதேச சபைக்கு சொந்தமான பழைய பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இடம்: தலைமை அலுவலகம்.
வேலணை பிரதேச சபை.
காலம்: 28.03.2023
செவ்வாய்க்கிழமை
மு.ப 10.30 மணி.

பகிரங்க ஏலத்தில் சித்தியடைவோர் உடனடியாக பணத்தினைச் செலுத்தி அன்றைய தினமே பொருட்களை ஏற்றிச் செல்லல் வேண்டும்.

செயலாளர்,
வேலணை பிரதேச சபை.
021 221 0180
(c-6231)


## அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளின் வருகையை எதிர்த்து போராட்டம்



(யாழ்ப்பாணம்)

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளின் யாழ்ப்பாண விஜயத்தை கண்டித்தும் யாழ்ப்பாணத்தை குழப்ப வேண்டாமென தெரிவித்தும் போராட்டமொன்று நடத்தப்பட்டது.

நேற்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் யாழ். நகரில் ஒன்று கூடியவர்கள் தீடீரென பேரணியாக வந்து ரிம்மர் மண்டபம் முன்பாக ஒன்று கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது காணாமல் போனோரை விடுதலை செய், அரசியல் கைதிகளை விடுதலை செய், வன்முறை வேண்டாம், யாழ்ப்பாணத்தை குழப்பாதே போன்ற கோஷங்களை எழுப்பினர்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் ரிம்மர் மண்டபத்தில் ஒன்று கூடியபோதே குறித்த போராட்டம் இடம்பெற்றது. (4-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 220 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 250 |
| தக்காளி | 160 | 130 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 180 |
| கோவா | 80 | 80 | 100 |
| கரட் | 120 | 170 | 150 |
| பூசணி | 60 | 70 | 80 |
| புடோல் | 150 | 140 | 140 |
| வாழைக்காய் | 160 | 150 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 280 | 250 |
| பெரிய வெங்காயம் | 120 | 150 | 140 |
| பாகற்காய் | 400 | 400 | 450 |
| வெண்டக்காய் | 250 | 280 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 110 | 100 |
| பயற்றங்காய் | 160 | 160 | 120 |
| லீக்ஸ் | 250 | 240 | 250 |
| பீற்றூட் | 130 | 140 | 180 |
| கறிமிளகாய் | 350 | 250 | 250 |
| முருங்கைக்காய் | 1700 | 1600 | 1200 |
| போஞ்சி | 200 | 200 | 280 |
| கத்தரிதம்புள்ள | 200 | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 300 | 250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 |
| இராசவள்ளி | 250 | 350 | 300 |
| வெங்காயப்பூ | 180 | 120 | 120 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 |
| வல்லாரை | 40 | 30 | 50 |
| ஈரப்பலா | 100 | — | 120 |

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கரணவாய்)

இரண்டு கிலோகிராம் கேரளக் கஞ்சாவை எடுத்துச் சென்ற இளைஞர் ஒருவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வதிரி திக்கம் வீதி ஊடாக கஞ்சா கடத்தப்படுவதாக நெல்லியடியில் உள்ள தேசிய புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு தேவரையாளிப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய இளைஞர்ஒருவரை 2 கிலோ 90 கிராம் கஞ்சாவுடன் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் வியாபாரி மூலை, பருத்தித்துறையைச் சேர்ந்த 25 வயதுடைய நபர் என பொலிஸார் தெரிவித்தனர். (4-60)


# வடக்கு மாகாண மக்களுக்கு குடியகழ்வு பற்றி முக்கியமான அறிவிப்பு!

JAFFNA EDUCATION FAIR 2023
Your Future Begins Here...

Canada, UK, Europe, Australia, New Zealand, USA
ஆகிய நாடொன்றில் கல்வி, குடிபெயர்வு, வேலைவாய்ப்பு விசாக்களுக்கான நேர்முகத் தேர்வு மற்றும் விண்ணப்பங்கள்

2023, ஏப்ரல் 1 ம் 2 ம் திகதிகளில்...
யாழ் வலம்புரி ஹோட்டலில்...
9.00 AM - 5.00 PM

☑ Student Visa
☑ Skilled Migration Visa
☑ Permanent Residency Visa

16 வயதுக்கு மேற்பட்ட எவரும் விண்ணப்பிக்கலாம்
குறிப்பு - மட்டுப்படுத்தப்பட்டு 200 நபர்களின் விண்ணப்பங்கள் மாத்திரமே நாளொன்றுக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

Platinum Sponsor: NORTHERN UNI, SLIIT UNI
Gold Sponsors: INFORMATICS INSTITUTE OF TECHNOLOGY, JCL, INTERNATIONAL STUDY CENTRE
Silver Sponsors: AQUINAS COLLEGE, edlocate
Print Media Partner: வலம்புரி
Official Radio Partner
Supported by
Organized by: EVOLUTION

(இ)

மேலதிக விபரங்களுக்கு 0778866832 / 0773436927



# 2 ஆம் ஆண்டு நினைவேந்தல்



அமரர்.
## வினாயகன் நாகராஜா

திதி: பங்குனித் திங்கள் வளர்பிறை பூர்வபக்க பஞ்சமி

அன்னை மடியில் 19.09.1940 - ஆண்டவன் அடியில் 18.03.2021

[illegible]
[illegible],
சாவகச்சேரி.

(14973)

என்றும் உங்கள் நினைவுகளுடன் குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சி...

கள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவர்கள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக, மக்களுக்காக முன்னெடுக்கப்பட வேண்டிய அனைத்து பணிகளையும் எவ்வித இடையூறுமின்றி தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்குத் தேவையான வழி காட்டுதல்கள் வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கம்புர குறிப்பிட்டார். (ம-9)

## நிமோனியா...

பகுதியைச் சேர்ந்த ரவிதாஸ் கவிஸன் என்ற 7 மாத ஆண் குழந்தையே மரணமடைந்துள்ளது.

இது தொடர்பில்திடீர்மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-9)

## ஊடகத்துறை...

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஊடகக் கற்கைகள் துறையின் புதிய துறைத் தலைவராக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி பூங்குழலி சிறிசங்கீர்த்தனனை நியமிக்க யாழ்ப்பாண பல்கலைக்கழக பேரவை அனுமதி வழங்கியுள்ளது.

நேற்று சனிக்கிழமை கூடிய மாதாந்த பேரவை கூட்டத்தின்போதே இந்த நியமனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஊடகக் கற்கைகள் துறையின் துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் கலாநிதி சி.ரகுராம் கலைப்பீட பீடாதிபதியாக பொறுப்பேற்ற நிலையில் ஊடகக் கற்கைகள் துறையின் துறைத் தலைவர் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்ட நிலையில் திருமதி பூங்குழலி சிறிசங்கீர்த்தன் நியமிக்கப்பட்டுள்ளார். (ம-9,33)

## தேர்தல் ஒத்தி...

களை முன்வைக்க தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தீர்மானித்துள்ளன.

எதிர்வரும் சில தினங்களில் சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றத்திடம் விடயங்களை முன்வைக்கவுள்ளதாக பஃவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய, நிதி விடுவிக்கப்படவில்லை என்பதுடன், அது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு அனுப்பிய கடிதத்திற்கும் நிதி அமைச்சிடமிருந்து எவ்வித பதிலும் வழங்கப்படவில்லை என அவர் கூறினார்.

நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய போதிலும் நிதியை விடுவிக்காதிருப்பது, நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் எனவும் ரோஹன ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார். (ம-9)

## மடுவில் துப்பாக்...

சணாமருதமடு பகுதியிலேயே நேற்று முன்தினம் இரவு இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

தட்சணாமருதமடுவை அண்மித்த காட்டுப்பகுதிக்கு வேட்டைக்கு செல்வதற்காக நான்கு இளைஞர்கள் தயாராகி நாட்டு துப்பாக்கியுடன் (இடியன்) தயாராகியுள்ளனர்.

அந்த நேரத்தில் இவ்வாறு வேட்டைக்கு செல்லத் தயாரான நான்கு பேரில் இருவருக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

மேலும் இவ்வாறு இடம்பெற்ற வாக்குவாதம் முற்றிய நிலையில் இடியனை கையில் வைத்திருந்த உயிரிழந்த நபர் வாக்குவாதத்தில் ஈடுபட்ட மற்றொருவருக்கு இடியன் கைப்பிடியால் அடிக்க முற்பட்டபோது தவறுதலாக வெடித்ததில் இடியனை வைத்திருந்த இளைஞன் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

## பொறுப்புக்...

இறுதி அறிக்கை மனித உரிமைகள் மீளாய்வுக்குழுவினால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில்,

நாட்டில் ஆயுதமோதல் இடம்பெற்ற காலப்பகுதியில் பதிவான மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளை சட்டத்தின்முன் நிறுத்துவதில் நிலவும் தாமதம் குறித்து தீவிர கரிசனை வெளிப்படுத்தியிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மீளாய்வுக்குழு, அக்காலப் பகுதியில் இடம்பெற்ற சட்டவிரோத படுகொலைகள், வலிந்து காணாமலாக்கப்படல்கள், சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைகள் உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கான முயற்சிகளை அரசாங்கம் தீவிரப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. (ம-9)

## இனப் பிரச்சினை...

மார்ச் 21 மற்றும் 25ஆம் திகதி வரை அவர் தென்னாபிரிக்க பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

அதன் அடிப்படையில் இலங்கைக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்க தென்னாபிரிக்க அதிகாரிகள் முன்வந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

1948 முதல் 1994 வரை தென்னாபிரிக்காவில் நிலவிய, நிறவெறி முடிவுக்குப் பிறகு அந்த நாட்டில், இன சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஜனாதிபதி தலைமையில் அமைச்சரவை உபகுழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை உருவாக்குவதும் இந்த திசையில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளில்அடங்கும் என இலங்கை முன்னதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு தெரிவித்திருந்தது.

அந்த வகையில் தென்னாபிரிக்கத் தலைவர்கள் இத்தகைய பொறிமுறையின் ஊடாக நல்லிணக்கத்திற்காக ஏற்படுத்தும் அணுகுமுறைகளை பகிர்ந்து கொண்டதாக அமைச்சர் அலி சப்ரி கூறியுள்ளார்.

இதன் அடிப்படையில் தென்னாபிரிக்க அனுபவத்தின் அடிப்படையில் இலங்கையில் பொறிமுறையை அமைப்பதற்கு ஒரு செயற்குழு நியமிக்கப்படும்.

இதற்காக இலங்கையின் அரசியலமைப்பு விதிகளுக்கு அமைய புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்படும் என்றும் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.(ம-9)

## நாவ...

ஜர் வழங்கப்படும் எனவும் அதற்குரிய சாதகமான பதிலினைத் தர மறுக்கும் பட்சத்தில் குறித்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்படும் என மேலும் தெரிவித்தார்.

நாவலர்கலாசார மண்டபத்திலிருந்து எதிர்வரும் ஏப்ரல் 6ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாநகர சபையினை வெளியேறுமாறு வடக்கு மாகாண ஆளுநர் பணித்துள்ள நிலையில் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்திருக்கும் நாவலர் மண்டபம் யாழ்.மாநகர சபையால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் மத்திய அரசாங்கத்தின் கீழுள்ள இந்து கலாசார அமைச்சு குறித்த மண்டபத்தினை தங்களிடம் ஒப்படைக்குமாறு பல தடவைகள் கோரிக்கைகள் விடுத்தபோது அது பல தடவைகள் யாழ்.மாநகர சபை அமர்வுகளில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது 45 மாநகரசபை உறுப்பினர்களின் ஏகமனதான தீர்மானத்தின் பிரகாரம் குறித்த விடயம் நிராகரிக்கப்பட்டதுடன் எக்காரணம் கொண்டும் மத்திய அரசாங்கத்திடம் அதனைக் கையளிக்க மாட்டோம் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ம-9,33,104)

## இலங்கையில்...

தில் அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் நிஜித் சுமணசேன குறிப்பிட்டுள்ளார். (ம-9)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 25/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1525
கன்னி 8 5 9 1 2 8

தன நிதானய
திகதி - 2023.03.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1100
H 10 59 64 81

கொவிசெத
திகதி 2023.03.25
சீட்டிழுப்பு இலக்கம் 3312
L 22 44 56 57

மெகா பவர்
திகதி 25/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1418
Y 17 08 36 45 64

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.03.25
சீட்டிழுப்பு இலக்கம் 379
மிதுனம் 11 13 14 27 மிதுனம்

மஹஜன சம்பத
திகதி 2023/03/25
சீட்டிழுப்பு இலக்கம் 5070
W 1 8 4 5 0 2

அத கோடிபதி
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1871
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2023.03.25
ரூ. 4,440,160/-
13 32 50 58 J

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 582
திகதி 2023-03-25
G 24 57 68 01
ரூ. 18,436,232/-
DLB DEVELOPMENT LOTTERIES
Web: www.dlb.lk

C 02 13 18 29 44
1221
2023.03.25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 316,397,384.20

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
திகதி 2023-03-25
வெற்றி வாரம் 3757
வர்ணம் இள நீலம்
07 32 39 49
ரூ. 10,375,420/-

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.25
சீட்டிழுப்பு இல : 4206
ரூ. 4,021,100/-
19 22 26 36 K

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2045
நிறம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.03.25
தினம் சனிக்கிழமை
A 07 12 35 66
ரூ. 3,612,960/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலை வாய்ப்பு

**நிர்வாக உத்தியோகத்தர்**



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6239)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**

- ✓ சம்பளம் - 25000 /= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- ✓ வயது-22 தொடக்கம் 35
- ✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6239)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777

## தனா பியூட்டி பஷன்

அழகுக்கலை வகுப்புக்கள் தனியாக மற்றும் குழுவாக நடைபெறுகின்றன. ஆர்வமுள்ளவர்களுக்கு இலவச பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும்.

தொடர்புகளுக்கு

**077 601 8563**

No.101, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (14852)

---

ஆலய நிகழ்வுகள், தேவாலய நிகழ்வுகள், திருமண நிகழ்வுகள், பரிசளிப்பு விழாக்கள், மற்றும் ஏனைய நிகழ்வுகளை நேரலையாக LED திரையில் காட்சிப்படுத்த அழையுங்கள் (15047)

**075 111 2222**

## வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை உடுக்கியவளை பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : (14975)

**077 819 1314**

## வீடு வாடகைக்கு

கொலிஜ் லேன் நீராவியடியில் 04 அறைகள், வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு (15015)

**071 610 7388**

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல தனியார் விருந்தினர் விடுதிக்கு சமையலாளர்(Cook) வேலைக்கு ஆட்கள் தேவை.

தொடர்புகளுக்கு (15021)

**074 175 4727**

---

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

## விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன்/ மணமகள் தேவையெனில் எம்முடன் தொடர்பு கொள்ளவும். வெளிநாட்டு மணமகன்/ மணமகள் தாராளமாக உள்ளனர். (14947)

+14372446737
+16476571347 Canada
077 240 9276 Srilanka

## கடன் வசதி

நீங்கள் வியாபாரம் ஒன்று நடத்துபவரா? அப்படியானால் உங்களுக்கு தேவையான கடன் வசதி எம்மால் செய்து தர முடியும். வட்டி 5% மட்டும். இது நடைமுறை கணக்கு (Current Account) மற்றும் வியாபார பதிவு வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே. (15041)

SJ FINANCE

**077 473 7737**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ் நகரில் உள்ள வீடு ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து வீட்டு வேலை செய்வதற்கும் வயோதிபர் ஒருவரை பராமரிப்பதற்கும் பணிப்பெண் ஒருவர் தேவை. (15033)

**077 327 6502**

## வீடு வாடகைக்கு தேவை

சிறிய குடும்பத்திற்கு கந்தர்மடம் நல்லூரை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்கு தேவை. (15039)

**071 379 5583**
**076 977 4628**

## CAKE தயாரிப்பு வகுப்பு

நீங்கள் சுயதொழில் ஆரம்பிக்க அல்லது வீட்டில் Cake செய்ய ஆர்வமுள்ளவர் என்றால் எமது வகுப்பில் சேரலாம். வார நாள் மற்றும் வார இறுதியில் வகுப்புக்கள் உண்டு. (15041)

Thanu Cakes & Catering

**077 473 7737**

## முன்பள்ளி ஆசிரியைகள் தேவை

யாழ் நகரின் மத்தியில் இயங்கும் முன்பள்ளிக்கு அனுபவம் உள்ள இல்லாத ஆசிரியைகள் தேவை. மாநகர எல்லை கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி விரும்பத்தக்கது. (15035)

**077 591 6469**
**077 083 3339**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம் (14739)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970, 074 007 1970

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 24 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

## நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 155 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- விலை 19 லட்சம் முதல் 15 லட்சம் வரை

பார்வையிடும் நேரம் :
காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை

தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15046)

**077 814 7389**
**077 986 5457**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 105 பரப்புக்காணி விற்பனைக்கு (மேட்டு நிலம்) (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் (காபற்வீதி ) இருந்து 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று நிலம்.
- ஒரு பரப்பின் விலை (300,000) மூன்று இலட்சம் மற்றும் (200,000) இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த காணி
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 km தூரம் சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 km தூரம்

*பார்வையிடும் நேரம் :*
காலை 06 தொடக்கம் மாலை 6 வரை

**Owner & Director**
**T.KALAITHASAN (KARAN)** (15042)

076 733 6047, 076 333 6079
076 733 6093
Office No : 021 315 5900




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.